l
281850

# தமிழ்ப் பொழில்

## தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தோன்றும் தமிழ் முன்னேற்றம்

## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 64

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2021

துணர் : 64 பிரமோதூத — சித்திரை மலர் : 2

மே—ஜூன்—1990

உள்ளுறை பக்கம்

1. காயகற்பம் .... 50
திரு அடிகளாசிரியர்

2. தமிழாய்வுப்போக்கு - நம்பிக்கையும் நடுக்கமும் ... 54
பாமைந்தன்

3. திருமலை நாயக்கர் காலத்துப் பாளையக்காரர்கள் .... 58
இரா. ப. கருணானந்தன், எம். ஏ.,

4. திரு நாராயண குருவின் தேவாரம் .... 72
டாக்டர் நா. ஆறுமுகம்

5. பாரதியின் காட்சி — நூல் மதிப்புரை .... 81
டாக்டர் இரா. சண்முகவேலன்,
எம். ஏ., பி.டி., எம்.பில்., பிஎச்.டி.

6. திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு .... 91
(சென்ற இதழ் தொடர்ச்சி)
இரா. சுந்தரமூர்த்தி, எம். ஏ., எம்ஃபில்.,

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

## தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி.எல்.,பிஎச்.டி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன், எம் ஏ எம்.லிட், பிஎச்.டி
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பி எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ.முத்துப்பிள்ளை, பி ஏ,
சென்னை.

,, முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பி எச்.டி,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி,சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி

,, புலவர். செ. இராசு எம். ஏ,
இணைப்பேராசிரியர்,கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்
துணைமுதல்வர்.த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., பி. எட்.,
தலைமைத் தமிழாசிரியர்,உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி

,, பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்., பிஎச். டி,
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

உ

இறைவன் துணை

# காயகற்பம்

திரு' அடிகளாசிரியர்

## தோற்றுவாய் :

1914 இல் நாகை சுப்பராய முதலியார் குமாரர் தங்கவேலு முதலியார் அவர்களால் தமது தனியாம்பாள் விலாச அச்சுக் கூடத்தில் பதினெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய பெரிய வைத்திய சில்லரைக் கோர்வை என்ற புத்தகத்தில் 84 ஆவது நூலாக கைலாச சட்ட முனி நாயனார் அருளிச் செய்த கற்பவிதி என்ற மருத்துவநூல் உள்ளது. இது காய கற்பத்தைச் சொல்லுகின்ற நூலாகும். காயம் என்றால் உடம்பு. கற்பம் என்றால் ஒரு குறிப்பிட்ட நீண்ட காலமாகும். உடம்பினை நீண்ட காலம் வைத்துக் கொள்வதற்குரிய மருந்து வகைகளைக் கூறுவதே காயகற்ப விதியாகும். இந்நூலில் சட்ட முனி பலவகைக் காயகற்ப முறைகளைக் கூறி உள்ளார். அவற்றில் சிலவற்றை மட்டும் நான் இங்கே கூறுகிறேன்.

## காயகற்ப மூலிகைகள் :

வீழிகொண்ட மச்சமுனி ஊழிக் காலம்
வேதாந்த சமாதியிலே இருந்து மீண்டார்
ஆழிகொண்ட கமலமுனி கொடுவேலி கொண்டு
அடங்காத சமாதியிலே அமர்ந்து நின்றார்
வாழிகொண்ட பிரமமுனி செருப்படையை உண்டு
வாகாக சமாதியிலே இருந்து போனார்
சூழிகொண்ட வாகமுனி பொற்றலையை உண்டு
சுகமாக சமாதியிலே இருந்திட்டாரே.

(பாட்டு எண் 77)

இருந்திட்டார் கஞ்சாவை கோரக்கர் உண்டு
ஏழுயுகம் கடந்துபின்பு எழுந்து இருந்தார்
அருந்திட்ட கரிசாலை கொங்கணர்தான் உண்டு
ஆச்சர்யம் நாலு யுகம் வாதம் பார்த்தார்
பெருந்திட்ட திருமேனி சொருபா நந்தர்
பேணி யுண்டு சமாதியிலே உகந்து நின்றார்
பொருந்திட்ட கெல்லனுடைக் கோவை உண்டு
போகமுனி கோடிவரை இருந்திட் டாரே

(பாட்டெண் 78)

## இதன் பொழிப்பு :

மச்சமுனிவர் வீழி என்னும் விழுதி இலையை உட்கொண்டும், கமலமுனி கொடுவேலி என்னும் மூலிகையை உட்கொண்டும், பிரமமுனி செருப்படை என்னும் மூலிகையை உட்கொண்டும், வாகமுனி பொற்றலைகையாந்தகரை என்னும் மூலிகையை உட்கொண்டும், கோரக்கர் கஞ்சா என்னும் மூலிகையை உட்கொண்டும் கொங்கணர் கரிசாலை என்னும் கரிசலாங்கண்ணியை உட்கொண்டும், சொரூபாநந்தர் திருமேனி என்னும் குப்பைமேனியை உட்கொண்டும் போக முனிவர் கொல்லன் கோவை என்னும் மூலிகையை உட்கொண்டும் நீண்ட காலம் வாழ்ந்திருந்தார்கள் என்பது பாட்டின் பொருளாகும். இவற்றால் வீழி என்ற விழுதி முதலான எட்டும் காயகற்ப மூலிகைகள் என்று தெரிகின்றன.

## கடுக்காய் :

கடுக்காய் என்னும் மருந்தால் கண்ணோய், நாக்குநோய், ஆண்குறிநோய், யானைக்கால், இடிப்பட்டபுண், அதிதூல நோய், வாதசோனித நோய், காமாலை, பலவகை விஷக் கடிகளால் உண்டாகும் நோய் முதலான பலவகை நோய்கள் போகும் என்று பதார்த்த குணசிந்தாமணி என்னும் நூல் கூறுகின்றது. (பாட்டு 691) இக்கடுக்காயைக் காயகற்ப மருந்தாகச் சட்டமுனி கூறுகின்றார் இக்கடுக்காயைக் காலத்திற்குத் தக்க அநுபானப் பொருள்களோடு சேர்த்து உண்ணவேண்டும் என்று சுந்தரானந்தர் கூறுகின்றாராம். ஆனி ஆடி மாதங்களில் வெல்லத்தோடு சேர்த்தும், ஆவணி, புரட்டாசியில் இந்துப்புடன் சேர்த்தும், ஐப்பசி கார்த்திகையில், சர்க்கரை கூட்டியும், மார்கழி தையில் சுக்குக்கியாழத்துடன் சேர்த்தும் சித்திரை வைகாசியில் அமுரி (சிறுநீர்) யோடு சேர்த்தும் கடுக்காயை உண்ண வேண்டுமாம். கடுக்காயில் பலவகை உண்டு. அவற்றுள் பொன்னிறக் கடுக்காயும், சிவந்த நிறக் கடுக்காயும் மிகவும் நன்று. கடுக்காயைக் கொட்டை நீக்கி தூள் செய்து வயது அறிந்து சாப்பிட வேண்டும் என்று கூறுகிறார். (சட்டமுனி கற்பவிதி பாட்டு 17 - 18)

## மற்றொரு கற்ப மருந்து :

பாரப்பா, இது கடந்து பின்பு, நீதான்
 பரிவான கரிசாலைக்குப்பை மேனி
சேரப்பா சிறியதொரு செருப்படையினோடு
 தெளிவாகச் சமன்கூட்டிச் சூரணமே செய்து

வாரப்பா தேனதிலே கிண்டி வைத்து
மைந்தனே தினங்கழஞ்சு கொண்டு வாநீ
தாரப்பா இருபதுநாள் கொண்டா யானால்
தரையிலுள்ள தோஷமெல்லாம் சாடிப் போமே.

(பாட்டு 25)

சாடுமே சுயம்பாட வாக்கில் வாலை
சகலநூல் கருவெல்லாம் தானே தோன்றும்
வாடுமே தேகமெல்லாம் பொன்னிறம் போலாகும்
மன்மதன்போல் கண்ணிரண்டு அழகு பெற்று
தேடுமே பெண்மேலே மோகம் அப்பா
தெளிந்துகொண்டு மாயத்தில் சிக்க வேண்டாம்
ஓடுமே சேத்துமந்தான் கீழே நோக்கும்
உதிரத்தில் வாய்வெலாம் ஒழிந்து போமே.

(பாட்டு 35)

## இப்பாடல்களின் கருத்து :

கரிசாலை என்கிற கரிசலாங்கண்ணி, குப்பைமேனி, சிறு செருப்படை இவற்றைச் சமனாகச் சேர்த்து உலர்த்திப் பொடி செய்து கொண்டு அப்பொடியை வேண்டும் தேனைக் கூட்டிக் கிளறி வைத்துக்கொண்டு நாள்தோறும் கழஞ்சு எடை உட்கொண்டு வந்தால் இவ்வாறு இருபது நாள் கொண்டால் உடம்பிலுள்ள குற்றங்கள் எல்லாம் அகன்று போகும், எல்லா நூல்களின் கருவெல்லாம் தோன்ற, சுயம்பாடும்படி வாக்கிலே கலைமகள் தோன்றுவாள். உடம்பெல்லாம் பொன்னிறம்போல் ஆகும். கண் அழகு உண்டாம். பெண்கள் மேல் மிகுந்த இச்சை உண்டாகும். நீ தெளிவான உள்ளங்கொண்டு அக்காம மயக்கத்தில் அகப்பட வேண்டாம். சேத்துமம் என்கின்ற கபம் ஓடிப்போகும். கீழும் மேலும் நோக்குகின்ற உதிர வாயுக்களெல்லாம் ஒழிந்து போகும் என்பது இப்பாடல்களுக்குரிய பொருளாகும்.

## தலை முழுகி வர கற்ப மருந்து :

தானென்ற தலை முழுக வரிசை கேளு
தாகமாம் மிளகோடு கடுக்காய் மஞ்சள்
வேனென்ற வேப்பரிசி நெல்லிக் காயும்
மீறாமல் சமபாகம் நிறுத்துக் கொண்டு
கோனென்ற ஆவின்பால் விட்டு ஆட்டி
குளிரவே முழுகிவர பட்சந் தோறும்

னென்ற நெய்வார்த்து உத்தமனே
பசும் பயிர் தேய்த்து குளித்துவாவே

## இதன் பொருள்:

காயகற்பம் உண்பவர் மிளகும், கடுக்காய்த் தோலும், மஞ்சளும் (கஸ்தூரி மஞ்சள் ஆகும்) வேம்பின் கொட்டையும், நெல்லிக்காயின் உள்ளே இருக்கும் கொட்டையும் சமன் எடையாக நிறுத்துக் கொண்டு, பசும்பால் விட்டு அரைத்து, சிறிது வெதுப்பி பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை தலைமுழுகி வரவேண்டும். வாரத்திற்கு ஒரு முறை பசுநெய் தேய்த்துப் பச்சைப் பயிர் அரைத்துத் தேய்த்துத் தலைமுழுகி வரவேண்டும். இக்கற்ப விதியில் வெற்றிலைக்குப் பூசுகின்ற சுண்ணத்தைத் தயாரிக்கும் முறையும் உணவோடு கூட்டு உண்ணும் உப்பு தயாரிக்கும் முறையும் கூறப்பட்டுள்ளன. வேறு பல காயகற்ப விதிகளும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளன. இப்பகுதியில் காய மருந்தாகிய கருநெல்லியை உண்டாக்கும் விதமும் கூறப்பட்டுள்ளது. அறிஞருடைய பார்வைக்கு இக்கட்டுரையைத் தருகின்றேன்.

மதிப்புரை

# தமிழாய்வுப்போக்கு – நம்பிக்கையும் நருக்கமும்

பாமைந்தன்
தஞ்சாவூர்.

## சமூகவியல் நோக்கில் தமிழ் மரபுகள் :

[நூலாசிரியர் : சிலம்பு நா. செல்வராசு, விற்பனை உரிமை : பாரிநிலையம், சென்னை முதற்பதிப்பு அக்டோபர் 1989, பக். 88, விலை ரூ 12].

சங்க இலக்கியப்பயிற்சி குன்றி வருகிற இக் காலத்தில் புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையின் முழுநேர முனைவர் பட்ட ஆய்வு மாணவரான சிலம்பு நா. செல்வராசு சங்க இலக்கியங்களைத் தக்க பேராசிரியர்கள் வழியே பயின்று, ஆராயவும் முற்பட்டிருப்பது மகிழ்ச்சிக் குரியதாகும்.

> ‘ நம்மிடம் உள்ள அனைத்தும் செம்மை சான்றவை ’ போன்ற முழக்கங்கள் அறிவியல் பூர்வமான தொன்மைத் தமிழ்ச் சமுதாயத்தை உலகிற்கு உணர்த்தத் தடையாயின. இந்நிலை இப்பொழுது மாறி வருகின்றது. (ப. 4)

என அவரே ‘ முகப்புரை ’யில் கூறியிருப்பதற்கேற்ப மாறிவரும் போக்கினையொட்டி இந்நூலை ஆக்கியுள்ளார்.

இருத்தல் மரபு, பரத்தமை மரபு, கூந்தல்களையும் மரபு எனும் ஐந்து ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகச் சமூகவியல்’ நோக்கில் தமிழ் மரபுகள் ’ எனும் இந்நூல் வெளிவந்துள்ளது.

இக்கட்டுரைகளுள் ‘ கூந்தல் களையும் மரபு ’ எனும் மானுடவியல் நோக்கிலமைந்த கட்டுரை மிகச்சிறந்த கட்டுரை யாகும். கூந்தல் உயிருக்கிணையாகவும், மகளிர் கூந்தல் கணவனுக்கு உரிமையானதாகவும், தமிழர் கருதியதைச் சான்றுகளுடன் விளக்கி இம்மரபின் தொடர்ச்சியை நிறுவி யுள்ளார் நா. செல்வராசு.

‘ பூவை நிலை மரபு ’ எனும் கட்டுரை அடுத்துச் சிறப்பிடம் பெறத்தக்கதாகும். ‘ பூவை நிலை ,வரலாற்றுப் போக்கில் பொருள் மாற்றம் பெற்றுள்ளமை முறைப்படி நிறுவப்பெற்றுள்ளது.

'பரிசில் மரபு' எனும் கட்டுரை 'பரிசில் நீட்டித்தல்' பற்றிய பாடல்களை ஆராய்கிறது. இஃது ஆய்வுநோக்கில் நல்ல தொடக்கமாகும்.

'இருத்தல் மரபு', பரத்தமை மரபு' எனும் கட்டுரைகளில் இலக்கியச் சான்றுகள் தெளிவாகத் தரப்பெற்றுள்ளன. சமூகவியல் நோக்கில் சற்று எந்திரமயப் போக்குக் காணப் படுகிறது.

தமிழகக் குறிஞ்சி முதலிய நிலப்பகுதிகளில் புணர்தல் முதலிய அவ்வக் காதல் வாழ்வே நிகழ்ந்தன என இதுவரையும் கருதப் பெற்றதாக (ப. 10) ஆய்வாளர் கூறுவது ஏற்புடையதன்று. மேலோட்டமாகச் சிலர் அவ்வாறு விளங்கிக் கொண்டும், விளக்கியும் வந்திருப்பினும் நச்சினார்க்கினியரே அஃதோர் இலக்கியக் கொள்கை என்பதை விளக்கியுள்ளார்.

> இவ்வதிகாரத்து நாடக வழக்கென்பன, புணர்ச்சி உலகிற்குப் பொதுவாயினும் மலை சார்ந்து நிகழுமென்றும் காலம் வரைந்தும் உயர்ந்தோர் காமத்திற்குரியன வரைந்தும் மெய்ப்பாடு தோன்றப் பிறவாறுங் கூறுஞ் செய்யுள் வழக்கம்.

என்பது அவர் உரைப்பகுதி.

மேலும் அக் கட்டுரையில் குறிஞ்சி முதலியன தமிழகத்தின் வெவ்வேறு காலகட்டச் சமுதாயத்தை விளக்குவனவாகலாம் (ப. 11) என்கிறார். சமூகப் பரிணாம நோக்கை இவ்வாறு கொள்வதில் கவனம் தேவை. ஒரு கால கட்டச் சமூகத்தின் அசமத்துவ வளர்ச்சி (Uneven development) பற்றிக் கருதுதல் வேண்டும்.

சங்க இலக்கியம் காட்டும் பரத்தையர் விலை மகளிரல்லர் என்பதைப் 'பரத்தமை மரபு' எனும் கட்டுரை சான்றுடன் நிறுவிக் காட்டுகிறது; விதி விலக்குகளையும் சுட்டி விளக்க மளிக்கிறது.

மொத்தத்தில் இந்நூல் தமிழாய்வு தழைக்குமெனும் நம்பிக்கையைத் தரும் நல்லதொரு நூலாகும்.

# சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம்

[ ஆசிரியர் : கே. எம். கே. கோமதி சங்கர், பதிப்பாண்டு : அக்டோபர் 89
வெளியீடு : சரயு பப்ளிகேஷன்ஸ், மேலகரம் - 627 818, தென்காசி, முதற்பதிப்பு : அக்டோபர் 1989,
பக்கங்கள் : ix + 106 = 115 விலை : ரூ. 15/- ]

'சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம்' எனும் நூலைப் புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் முனைவர் பட்ட ஆய்வாளராயுள்ள கே. எம். கே. கோமதி சங்கர் எழுதியுள்ளார். இவரது புனைபெயர் கவிஞர் பொதிகைத் தமிழரசன் என்பதாகும். இவர் கவிதைத் தொகுதிகள் சிலவற்றையும் வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது.

டாக்டர் நா. ஆறுமுகம் அவர்களின் அணிந்துரை தந்த நம்பிக்கையோடும், 'எழுதியதால் பேசுகிறேன்' எனும் நூலாசிரிய உரையின் ஆரவாரமிக்க வரிகள் தூண்டிய ஆர்வத்தோடும் நூலினுள் நுழைந்தபோது மிகப்பெரிய ஏமாற்றமே மிஞ்சியது.

> 1. துறவறத்தில் ஈடுபட்டார் தவஞ்செய்தல், கொல்லாமை, புலால் உண்ணாமை முதலியன தவிர்க்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது (ப 4)

'மேற்கொள்ள வேண்டும்' என்று எழுத வேண்டிய இடத்தில் 'தவிர்க்க வேண்டும்' என்றெழுதியுள்ளார் நூலாசிரியர். இரண்டிற்கும் ஒரே பொருளோ ?

> 2 வேட்டைக்குச் செல்கின்ற ஆண்கள் மிருகங்களால் உயிர் இழக்க நேரிடும் பொழுது ஒரு குழுவிலுள்ள ஆண்களின் எண்ணிக்கை குறையும். மாறாகப் பெண்களின் எண்ணிக்கை கூடும். இப்பொழுது ஒருபெண் பல ஆண்களை மணக்கும் சாத்தியம் தோன்றியது (ப 9)

இதிலுள்ள தவறு வெளிப்படையானது. பெண்களின் எண்ணிக்கை கூடினால் ஒரு ஆண் பல பெண்களை மணக்கும் சாத்தியம் தானே தோன்றும். இதைச் சொல்லச் சமூகவியல் கூட வேண்டாம். அடிப்படைக் கணக்குத் தெரிந்தால் போதுமே !

3. தாயினது அன்பு மகன்மீது எப்பொழுதும் மிகவும் அன்புடையதாகவே இருந்திருக்கிறது ; இருக்கும். (ப. 11)

'அன்பு ... ... அன்புடையதாகவே இருந்திருக்கிறது.' என்கிறார். கவிஞரல்லவா? எனவே எளியோர் புரிந்து கொள்ள இயலாது.

4. முதலில் குடிமக்களுக்குச் சாதகமாகச் சொல்வது போல் தமது பிரச்சாரக் கருத்தை வைக்கிறார் புலவர். பிறகு மெல்ல மெல்ல அரசனுக்கு எதிர்க் கருத்தாகப் பாடல்கள் மொழியப்பட்டு இருப்பதை உய்த்துணர முடியும். (ப. 25)

நூலாசிரியர் குடிமக்களையும் அரசனையும் எதிரெதிர் முனையில் நிறுத்திக் கொள்கிறார். அவ்வாறெனில் குடிமக்களுக்குச் சாதகமாகச் சொல்வது அரசனுக்கு எதிர்க்கருத்துத்தானே. இதில் 'மெல்ல மெல்ல ...' என்ன மாற்றம் ஏற்பட்டு விடுகிறது, அதில் 'உய்த்துணர ...' என்ன இருக்கிறது. 'எதிர்க்கருத்தாக' என்னுமிடத்தில் 'ஆதரவாக' என்று போட்டிருக்கவேண்டும்.

5. வடமொழியில் போர் என்பதற்குக் 'காவிஷ்டி' என்பது பொருள். (ப. 30)

'காவிஷ்டி' எனும் வடமொழிச் சொல்லுக்குப் போர் என்பது பொருள்' என்று எழுதவேண்டும். ஆனால் கவிஞராயுள்ள நூலாசிரியரின் கருத்தென்னவோ? யாரறிவார்?

இவ்வாறு முன்னுக்குப்பின் முரணான, குழப்பமான மொழித் திறன் குன்றிய, பிழையான பகுதிகளை எடுத்துக் காட்டப் புகுந்தால் ஏறத்தாழ நூல் முழுவதையுமே தரவேண்டியிருக்கும். அது நூலாசிரியரின் பதிப்புரிமையை மீறுகிற சட்டப் புறம்பான செயலாகிவிடும். அதற்குத் தமிழ்ப்பொழிலும் இடந்தராது

மொத்தத்தில் தமிழையும், சமூகவியலையும், ஆராய்ச்சி நெறிமுறைகளையும் அரைகுறையாய்த் திணித்துக்கொண்டு பழமொழி நானூறு பற்றிய ஆராய்ச்சி என்னும் பெயரால் அச்சிடப்பட்டுள்ள உளறலே இந்நூல். தமிழ் தெரிந்த ஒருவரிடம் காட்டித் திருத்தி நூலாக வெளியிட்டிருந்தால் ஓரளவாவது தேறியிருக்கும். ஒரு வேளை தமிழ்க் கல்வியுலகம் இன்றுள்ள நிலையில் இதுவே பெரிது என நூலாசிரியர் கருதியிருக்கலாம். ஒப்புக்கொள்ள வேண்டியதுதான் நூலாசிரியரின் துணிச்சலைப் பாராட்டியே ஆக வேண்டும்.

# திருமலை நாயக்கர் காலத்துப் பாளையக்காரர்கள்

இரா. ப. கருணானந்தன், எம். ஏ.,
தொல்பொருள் ஆய்வுத்துறை.

திருமலை நாயக்கர் என்னும் மாளிகைக்குப் பெரும் தூண்கள் போன்று விளங்கியவர்கள் பாளையக்காரர்கள். மதுரை நாயக்க அரசுக்குத் திறை செலுத்துதல், தங்களது பாளையத்தில் நீதி செலுத்துதல், போர் காலங்களில் படை வீரர்களைக் கொடுப்பதுடன் போரில் தாமும் பங்குபெறுதல் என்னும் சீரிய பணிகளைச் செய்து சிறந்தவர்கள் பாளையக்காரர்கள்.[1]

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் வெளியீடாகிய பாளையப்பட்டுக்களின் வரலாறு (மெக்கன்சி தொகுத்த கைப்பிரதிகள்) என்னும் நூலின் துணையுடன் திருமலை நாயக்கருக்கும், பாளையக்காரர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு, சேதுபதி போரில் பாளையக்காரர்களின் பங்கு முதலியன பற்றி இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகிறது.[2]

## சேதுபதி போர் :

கி. பி 1637 வாக்கில் திருமலை நாயக்கர் சேதுபதி மீதான போரை மேற்கொண்டார்.[3] அப்போது மறவர் நாட்டின் தலைவராக இருந்தவர் சடைக்கத் தேவர் என்ற தளவாய் சேதுபதி[4] தளவாய் சேதுபதி மதுரை அரசுக்குக் கட்டுப்பட்டு கப்பம் செலுத்தாமையால் இப்போர் ஏற்பட்டது என்றும், தம்பி என்பவனுக்கு மறவர் நாட்டை வழங்குவதற்காக திருமலை நாயக்கர் இப்போரை மேற்கொண்டார் என்றும் இரண்டு கருத்துக்கள் உள்ளன[5] பாளையப்பட்டுக்களின் வம்சாவளி திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்த பாளையக்காரர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் பெரும்பாலும் அவர்கள் சேதுபதி போரில் பங்கு பெற்றமை பற்றியே தெரிவிக்கின்றன. வரலாற்று நூல்கள் சேதுபதி போரில் பங்கு பெற்ற ராமப்பையன், ரங்கண்ண நாயக்கன் முதலியோரைப் பற்றி மட்டுமே பேசுகின்றன. ஆனால் அப்போரில் பங்குபெற்றுச் சிறப்புடன் போரிட்டு வெற்றி கண்ட பாளையக்காரர்கள் பற்றி அதிகமாகப் பேசுவதில்லை. இக்குறையை பாளையப்பட்டுக்களின் வம்சாவளி ஓரளவு போக்குகிறது.

**பாளையக்காரர் :**

பாளையப்பட்டுக்களின் வம்சாவளி வரலாறு மூன்று தொகுதிகள் மட்டும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்றாம் தொகுதியைத் தவிர்த்து மற்ற முதல் இரண்டு தொகுதிகளும் திருமலை நாயக்கர் சேதுபதி போர் பற்றிப் பெரிதும் பேசுகின்றன. முதல் இரண்டு தொகுதிகளிலிருந்து இராமப் பையனுடன் சேது நாட்டுப் போருக்குப் பாளையக்காரர்கள் உடன் சென்றதாக அறிய முடிகிறது.

**அவர்கள் :**

1. ஆயக்குடி குமார கொண்டம நாயக்கர்
2. தவசிமடு ரெகுராம சோத்தள நாயக்கர்
3. நிலக்கோட்டை தண்டு கூளப்ப நாயக்கன்
4. சுக்காம்பட்டி பாலமுக்கொண்டு முத்தையா நாயக்கர்
5. தொட்டையங்கோட்டை பெத்தளு நாயக்கர்
6. மாம்பாறை மலையபொம்மு நாயக்கர்
7. விருபாட்சி திருமலை கும்பள சின்னப்ப நாயக்கர்

என்னும் எழுவர். பாளையக்காரர்கள் அவர்கள் ஆட்சி செய்யும் பாளையங்களுடன் சேர்த்து அழைக்கப்படுகின்றனர்.

## போர்ச்செலவுக்குப் பாளையங்கள் பணம் கொடுத்தல் :

போர்களில் தாமும் தம் படைகளும் கலந்து கொள்வதுடன் போர்ச் செலவிற்காக மதுரை அரசுக்குப் பாளையங்கள் பணமும் கொடுத்துள்ளன. திருமலை நாயக்கர் ஆயக்குடி குமார கொண்டம நாயக்கரிடம் தண்டு செலவிற்காக 5000 கலிப்பணம் வழங்குமாறு கேட்டுள்ளார். ஆயக்குடி பாளையக்காரர் திருமலை நாயக்கருடன் பேசி 3000 கலிப் பணமாகக் குறைத்துக் கொடுத்துள்ளார். இதனைத் தொடர்ந்து சேதுபதி படையெடுப் பிற்கு ஆகும் செலவிற்காகவும் இதே ஆயக்குடி பாளையக்காரர் 2000 கலிப்பணம் திருமலைநாயக்கருக்குக் கொடுத்துள்ளார்.[6]

சேதுபதி போர்க்கு முன்னர் நடைபெற்ற முதல் மைசூர்ப் போர்க்கு திருமலைநாயக்கரிடம் விருபாட்சி திருமலை கும்பள சின்னப்ப நாயக்கன் 1000 சக்கரம் பொன் கொடுத்ததுடன் தானும் தன்படையுடன் சென்று வந்துள்ளான்.[7]

**பாம்பன் அணை கட்டுதல் :**

தளவாய் சேதுபதி இராமேசுவரம் தீவுக்குள் சென்று ஒளிந்து கொண்டார். சேதுபதியைக் கைது செய்வதற்கு இராமேசுவரம் தீவுக்குள் படைகள் செல்லப் பாம்பன் ஆற்றின் மீது அணை (பாலம்) கட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. ஏனவே, திருமலை நாயக்கரின் படைத்தலைவன் ராமப்பையுன் பாம்பன் பாலம் கட்டும் பணியை மேற்கொண்டான். வல்லுநர்களைக் கொண்டு மிகச்சில நாட்களில் ராமப்பையன் பாம்பன் மீது பாலம் அமைத்தான் என்கிறது. ராமநாதபுரம் மானுவல். பாம்பன் அணை கட்டும் பணியில் ராமப்பையன் முதல் கல்லைச் சுமந்தான் என்று கூறுவதுடன் பாளையக்காரர்களை இப்பணி யில் ஈடுபடுத்தியதை

"பாளையக் காரர் பலபேரை தானழைத்து
அயோத்தி ராமர் அடைந்த திருவணைக்கு
கல் சுமக்க வேண்டுமென்றான் கண்ணன் புலி
ராமய்யனும்"

எனத் தெரிவிக்கிறது. ராமப்பையன் அம்மானை.[8]

வம்சாவளி குறிப்பிடும் இராமப்பையனுடன் போர்க்குச் சென்ற ஏழு பாளையக்காரரும் பாம்பன் அணை கட்டும் பணியில் ஈடுபட்டிருக்கவேண்டும். இருப்பினும் வம்சாவளி நூல்

1. நிலக்கோட்டை தண்டு கூழப்ப நாயக்கன்
2. தொட்டையங்கோட்டை பெத்தளு நாயக்கர்
3. மாம்பாறை மலைய பொம்மு நாயக்கர்

என்ற மூவர் மட்டுமே பாலம் கட்டும் பணியில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. இம் மூவரும் இப்பணியில் சிறப்பாகப் பணிபுரிந் தமையால் இவர்கள் பெயர்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன எனலாம்.

இவர்களுள் மாம்பாறை மலைய பொம்மு நாயக்கர் பாம்பன் அணை கட்டுவதற்குத் தேவையான சாமான்களை எல்லாம் வரவழைத்துக் கொடுத்துள்ளார்.[9] தொட்டையங்கோட்டை பெத்தளு நாயக்கர் திருமலை நாயக்கர் ஆணையின்படி தமது ஊரைச் சேர்ந்த வழிச்சனங்களை எல்லாம் அழைத்து வந்து பாம்பன அணை கட்டும் பணியில் ஈடுபடுத்தினார்.[10] வம்சாவளி வரலாறு இவ்வாறு இராமப்பையனால் கட்டப் பெற்ற அணையைக் கல்லணை என்று அழைக்கிறது.[11]

பாம்பன் அணை அமைக்கும் பணியில் பாளையக்காரர் பொது மக்கள் என அனைவரும் பயன்பட்டனர் என்பதைப் பாளையப் பட்டுக்களின் வம்சாவளி வரலாறு நூல் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

## இறந்த பாளையத்தார் :

சேதுபதி போரில் இராமப்பையனுடன் உடன் சென்ற ஏழு பாளையக்காரருள் இருவர் மட்டும் போர்க்களத்தில் இறந்ததாகப் பாளையப்பட்டுக்களின் வரலாறு நூல் கூறுகிறது.

1. சுக்காம்பட்டி பாலமுக்கொண்டு முத்தையா நாயக்கர்
2. மாம்பாறை மலையபொம்மு நாயக்கர்

என்ற இருவர் மட்டும் போர்க்களத்தில் இறக்க, மற்ற 5 பாளையக்காரரும் சேதுபதி போர் முடித்து ராமப்பையனுடன் மதுரை திரும்பியுள்ளனர்.

இவ்விருவருள் மாம்பாறை மலையபொம்மு நாயக்கர் பாம்பன் அணை கட்டுவதற்குத் தேவையான சாமான்களை எல்லாம் கொண்டுவந்து கொடுக்கும் பணியை மேற்கொண்டு, அணை கட்டி முடிந்ததும் அதன் மீது படை நடத்திச் சென்று. போரின் முதல் அணியில் நின்று பாம்பனில் நடைபெற்ற போரில் இறந்துள்ளார்.[12] சுக்காம்பட்டி பாலுமுக்கொண்டு முத்தையா நாயக்கர் பாம்பன் பாலம் கட்டுவதற்கு முன் நடந்த போரில் இறந்தாரா? அல்லது தீவுக்குள் நடந்த போரில் இறந்தாரா என்பது அறியுமாறு இல்லை.[13] அம்மை நோயுடன் போர்க்களம் வந்த வன்னியத்தேவன் பாளையக்காரர்களைப் படுத்திய பாட்டை

"விருப்பாச்சி நாயக்கனை விருது சொல்லி வெட்டலுற்றான்
பொம்மண நாயக்கனைப் புளந்தான் இருதுண்டாய்
தொட்ட நாயக்கனையும் தோலைப் பிழிந்திரைத்தான்"

என்று இராமப்பையன் அம்மானை கூறுவது கருதத்தக்கது.[14]

## பாளையத்தார் பெற்ற பரிசில் :

சேதுபதி போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இராமப் பையன் நோயால் இறந்தான் என்றும் ஒரு கருத்து உள்ளது.[15] ஆனால் பாளையப்பட்டுக்களின் வம்சாவளி சேதுபதி போர் முடிந்த பிறகும் ராமப்பையன் உயிரோடு இருந்ததாகத் தெரிவிக் கிறது. வன்னியத்தேவனை யுத்தத்தில் கொல்வதற்கும், சேது

பதியைப் பிடித்து அவருடைய சீர்மையைப் பிடிப்பதற்கும் பெரிதும் உதவியாக இருந்தவர்கள் என்பதை எடுத்துக் கூறி பாளையக்காரர்கள் திருமலை நாயக்கரிடம் பரிசுகள் பெறுவதற்கு ஏற்பாடு செய்ததுடன் தானும் பாளையக்காரர்களின் சேவையைப் பாராட்டிப் பரிசுகள் தந்தவன் ராமப்பையன் என்று வப்சாவளி விளக்கிச் சொல்லுகிறது.[16]

நிலக்கோட்டை பாளையக்காரன் கூழப்பநாயக்கன் சேதுபதி போரில் பங்கு பெற்ற காரணத்திற்காகத் தண்டு (போர்) கூழப்ப நாயக்கன் என அழைக்கப்பட்டான். திருமலை நாயக்கரும் ராமப்பையனும் சேதுபதி போரில் சிறப்புடன் பணியாற்றி வீரத்தை நிலைநாட்டியமைக்கு மாற்றி மாற்றிப் பரிசுகள் ஈந்து பாளையக்காரர்களை கௌரவித்துள்ளனர். தண்டு செலவிற் காகத் திருமலை நாயக்கர் பாளையக்காரர்களிடம் பெற்ற தொகையையும் மிஞ்சி விடுமோ என்று நினைக்கின்ற அளவிற்கு வீரத்தைப் பாராட்டி வழங்கியுள்ள பரிசுகள் நினைக்க வைக்கின்றன.

மைசூர்ப் போரிலும் (முதல் மைசூர் போர்) சேதுபதி போரிலும் விருபாட்சி திருமலை கும்பள சின்னப்ப நாயக்கன் ஆற்றலுடன் போரிட்டான் என ராமப்பையன் திருமலை நாயக்க ரிடம கூறினான். என்னுடைய பெயர் கொண்டவன் என்பதால் சமரில் வல்லவனாய்த் திகழ்ந்தான் என்று விருபாட்சி பாளையக் காரனை மனந்திறந்து பாராட்டினார் திருமலை நாயக்கர். விருப்பாட்சி நாயக்கனின் வீரத்தைப் பாராட்டி தங்கக் காப்புடைய மயிலிறகு குஞ்சம், ரத்தினம் பதித்த பெரிய பச்சைக் கடயம், ரத்தினம் பதித்த கைக்கட்டு கோவைக்காய் வடிவில் தங்கத்தால் ஆன தாயித்து கைக்கட்டு, முத்துமாலை கண்டசரம் முதலிய மதிப்புமிக்க பரிசுகளையும் வழங்கினார் திருமலை நாயக்கர்.[17]

தவசிமடு பாளையத்தில் ஏழாவது பாளையக்காரன் ரெகுராமு சோத்தளநாயக்கன். சேதுபதி போரில் தண்டு கொண்டு செல்கையில் இப்போர்க்கு உடன் வருமாறு இப்பாளையக் காரனுக்கு ஆணை வழங்கப்பட்டது. போர் முடிந்து திரும்பிய வுடன் இராமப்பையன், திருமலை நாயக்கரிடம் கூறி ரெகுராம நாயக்கருக்கு வஸ்திரம் பூஷணாதி முதலிய வெகுமதிகளை சேதுபதி போரில் சிறப்புடன் பணிபுரிந்தமைக்காகப் பெற்றுத் தந்தான்.[18] இப்போரில் பணிபுரிந்தமையைப் பாராட்டி தொட்டையங்கோட்டை பெத்தளு நாயக்கருக்கு குதிரை முதலிய

அநேகம் வெகுமதிகளை தளவாய் ராமப்பையன் வழங்கியதாக வும் வம்சாவளி தெரிவிக்கிறது.[19]

## மக்களை ஆட்சியில் அமர்த்தல் :

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சுக்காம்பட்டி பாளையத்தின் எட்டாவது பாளையக்காரன் பாலமுக்கொண்டு முத்தையா நாயக்கர். இவர் போர்க்கலையில் வெகு சூரர் இவருடைய 42 வது ஆட்சியாண்டில் திருமலை நாயக்கர் சேதுபதி போர் ஏற்பட்டது. நாயக்கர் பக்கத்துக்குச் சகாயமாய் இருக்கும் என்று இவர் உடன் அழைத்துச் செல்லப்பட்டார் பாளையக் காரன், சேதுபதி போரில் வீரமுடன் பணியாற்றி இறக்கவே அவனுடைய மகனையே அப்பாளையத்தின் பாளையக்காரனாக திருமலை நாயக்கர் அனுமதித்தார். தந்தையின் சேவையை நினைவிற்கொண்டு ராமப்பையன் அவன் மகனுக்குச் சில கிராமங்களையும் கொடுத்துள்ளான். "அவர் குமாரன் பாலமுக் கொண்டு முத்தைய்யா நாயக்கர் பட்டம் ஆளுகுற நாளையில் அவர் சிறுபிள்ளையாச்சே. அவர் தகப்பன் சண்டையினால் (சேதுபதி போரில்) மரணமடைந்த படியினாலே கர்த்தாக்களுக்கு (திருமலை நாயக்கர்) ராமப்பையர் தெரியப்படச் சொல்லி, தயவாய் நடப்பிவித்துக்கொண்டு வந்தார்" என்பது வம்சாவளி யின் வாசகம்[20].

இதைப்போன்று மாம்பாறை பாளையக்காரன் மலைய பொம்மு நாயக்கனும் சேதுபதி போரில் இறந்தான். "வன்னியத் தேவனை யுத்தத்தில் கொல்வதற்கும்,[21] சேதபதியைப் பிடித்து அவருடைய சீர்மையைப் பிடிப்பதற்கும் பெரிதும் உதவியாக இருந்தவன்" என்று இராமப்பையன் இறந்த மலையபொம்மு நாயக்கனைப் பாராட்டி — அவன் மகனுக்கு வஸ்திரம், பாக்கு, வெற்றிலை முதலியன கொடுத்து திருமலை நாயக்கரின் அனுமதி யுடன் மாம்பாறை பாளையத்திற்கும் பட்டம் கட்டி வைத்தான்.[22]

## இராமப்பையன் அம்மானை கூறும் பாளையக்காரர்கள் :

தொட்டப்ப நாயக்கன், களப்பநாயக்கன், அம்மைய நாயக்கன், முத்தையநாயக்கன், பொம்ம நாயக்கன், பொம்மணன், ஆய்க்குடிக் கொண்டையன், விருப்பாச்சி நாயக்கன், பெத்தண நாயக்கன் முதலியோரும் மற்றும் பல பாளையக்காரரும் ராமப்பையனுடன் சேதுபதி மீதான போர்க்கு உடன் சென்றனர் என்று இராமப்பையன் அம்மானை நூல் தெரிவிக்கிறது.[23]

பாளையப்பட்டுக்களின் வம்சாவளி நிலக்கோட்டை கூளப்ப நாயக்கன், விருபாட்சி திருமலை கும்பள சின்னப்ப நாயக்கன், ஆய்க்குடி குமாரகொண்டம நாயக்கன் முதலியோர் சேதுபதி மீதான போரில் உடன் சென்றவர்கள் எனத் தெரிவிப்பதை இராமப்பையன் அம்மானை நூலும் உறுதி செய்கிறது. அம்மானை நூல் விருப்பாட்சி நாயக்கனும், ஆயக்குடி கொண்டையனும் உடன் சென்றனர் என்று அவர்களின் முழுப்பெயரைக் குறிப்பிடாமல் கூற அவர்களின் முழுப்பெயரையும் வம்சாவளி நூல் தருகிறது. இராமப்பையன் அம்மானை கூறும் முத்தையா நாயக்கன், பொம்ம நாயக்கன், பெத்தண நாயக்கன் முதலியோர் முறையே பாளையப்பட்டுக்களின் வம்சாவளி தரும் சுக்காம்பட்டி பாலமுச்கொண்டு முத்தையா நாயக்கர், மாம்பறை மல்லைய பொம்மு நாயக்கர், தொட்டையங்கோட்டை பெத்தணு நாயக்கன் என்ற இவர்களாக இருக்கலாம்.

சேதுபதி போர்க்கு உடன் வந்து வீரம் விளைவித்துத் திரும்பிய பாளையக்காரர்களுக்கு இராமப்பையன் பரிசுகளைக் கொடுத்துள்ளான் என்பதை வம்சாவளி நூல் மூலம் அறிந்து கொள்கிறோம். ஆனால் அதே நேரத்தில் தனக்குக் கீழ் பணி யாற்றிய பாளையக்காரர்களிடம் வேலை வாங்க வேண்டும் என்பதற்காக அவர்களைக் “ கழுவில் ஏற்றி விடுவேன்; வெட்டி அரிந்து வெயிலில் காயப் போட்டிடுவேன் ” என்றெல்லாம் மிரட்டியுள்ளான்.

கோட்டை தனை (போகலூர்) வாங்கட்டால்
கொன்றிடுவேன் உங்களையும்
வைகைக் கரைதீரம் வாகாய்க் கழுவில் வைப்பேன் ”
நாளைப் பகல் பொழுது நாழிகைக்கு உள்ளாக
தீவைப் பிடியாட்டால் சேரவே கொன்றுழக்கி
வைப்பேன் கடற்கரையில் வாகாய்க் கழுவதனில் ”
தீவை அடைத்துக் கொண்டு சென்று போர் செய்யாவிட்டால்
பாங்காய் கடற்கரையில் பார்கழு வேற்றிடுவேன்
வெட்டி யரிந்து வெயிலில் காயப் போட்டிடுவேன் ”

என்று இராமப்பையன் பாளையக்காரரை சேதுபதி போரில் மிரட்டியதாக இராமப்பையன் அம்மானை கூறும்[24] போகலூர்க் கோட்டைத் தலைவனை உளியால் செதுக்கி தோலை உரித்துக் கொன்றவன் இராமப்பையன் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமலை நாயக்கரின் கிரீடம் முதலியன தரித்தல் :

திருமலை நாயக்கரிடம் குமாரன், கெட்டி என அண்ணன் தம்பி இருவர் ஊழியம் பார்த்து வந்தனர். ஒருநாள் நாயக்கர் மதுரை மீனாட்சியம்மை கோவிலில் அப்பியங்கஸ்நானம் செய்வதற்காக கிரீடம், ஆபரணங்கள் முதலியவற்றைக் கழற்றி வைத்து விட்டுச் சென்றார். தம்பியான கெட்டி முதலி திருமலை நாயக்கரின் கிரீடம் முதலான அணிகலன்களை எடுத்து தரித்துக் கொண்டு சிம்மாசனத்தில் இருந்து தூங்கினான். அண்ணன் குமாரன் பார்த்துத் தன் வேலையுண்டு என்று இருந்து விட்டான். ஸ்நானம் முடிந்துத் திரும்பிய நாயக்கர் தன்னுடைய கிரீடம் முதலியவற்றைத் தரித்துக் கொண்டு தூங்கும் கெட்டி முதலியை எழுப்பாமல் சென்று விட்டார். அரசன் பார்த்து விட்டதை அறிந்து அண்ணன் தம்பி இருவரும் கிரீடம் நகை முதலியவற்றை அங்கேயே கழற்றி வைத்து விட்டு தப்பித்தோம் பிழைத்தோம் என்று வேற்று ஊருக்கு ஓடிவிட்டனர்.

## வணங்காத கெட்டி முதலி :

தப்பி ஓடிய கெட்டி முதலி அமராவதி பாளையக்காரனின் பிளவை நோயைத் தீர்த்து அப்பாளையத்தின் பாளையக்காரன் ஆனான். நம்மிடம் பணியாளாய் இருந்தான் பாளையக்காரன் ஆனான், என அறிந்த திருமலை நாயக்கர் அவனைப் பிடித்து வரும்படி தளவாய் இராமப்பையனை சேனையுடன் அனுப்பி வைத்தார். ஆனால், இராமப்பையனால் கெட்டி முதலியைக் கைது செய்து கொண்டு வர இயலவில்லை. எனவே திருமலை நாயக்கர் நம்மிடத்தில் ஊழியம் பண்ணிக் கொண்டிருந்தவனுக்கு பிரபலத்துக்கு ஏது இருந்தபடியினாலே நம்முடைய கிரீடம் முதலான ஆபரணங்கள் வைத்துக் கொண்டான். எனவே அப்படிப்பட்டவனை நாமே வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என நினைந்து ஒரு தரம் வந்து தம்மை பார்த்துச் செல்ல கெட்டி முதலிக்கு எழுதினார்.

கெட்டி முதலியும் நாயக்கரைப் பார்ப்பதற்காக மதுரை சென்றான். வணங்காத தலையையுடைய கெட்டி முதலியை எப்படியும் தலை வணங்க வைத்துவிட வேண்டும் என்று கருதிய திருமலை நாயக்கர் யானை மேல் அம்பாரியில் அமர்ந்து ஆசார வாசல் வழியே வருமாறு பணித்தார். தன் தலையை வணங்க வைக்கவேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு என அறிந்து கொண்ட கெட்டிமுதலி முன்னுக்குக் குனியாமல் பின்னுக்கு மல்லாக்கப் படுத்துக் கொண்டு யானையை அரண்மனைக்குள் கொண்டு சென்றதாக வம்சாவளி கூறுகிறது.[25]

## சுரை இலையில் சோறு உண்ணல் :

தலைவணங்க வைக்கும் முயற்சியில் தோல்வியடைந்த திருமலை நாயக்கருக்கு கெட்டிமுதலியை பந்தியில் அமரச்செய்து தான் உண்ட இலையையாவது எடுத்துப் போடுமாறு செய்து விட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. எனவே பந்தி நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பந்தியில் அமர்ந்து சாப்பிட கெட்டி முதலி உட்பட பாளையக்காரர் அனைவரும் அழைக்கப்பட்டனர். பாளையக்காரர் அனைவரும் உண்டபின் அவரவர் உண்ட இலையைத் தாமே எடுக்கவேண்டும் என்னும் நாயக்கரின் ஆணை அறிவிக்கப்பட்டது. நாயக்கர் தன்னைப் பணிய வைப்பதற்காகச் செய்த முயற்சி இது என உணர்ந்த கெட்டி முதலி பந்திக்கு சுரைஇலை ஒன்றை எடுத்துச்சென்றான். வாழை இலையில் சாப்பிடாமல் கொண்டு சென்ற சுரை இலையில் வைத்துப்பதார்த்தங்களைச் சாப்பிட்டான்.

சாப்பிட்டு முடிக்கும் தருவாயில் கெட்டி முதலி உண்ணப் பயன் படுத்திய சுரை இலை வெந்து கீரையாக அதனையும் சாப்பிட்டுவிட்டு, மற்றவர்களைப் போல் இலையை எடுக்காமல் வெறுங்கையுடன் கை கழுவச் சென்றானாம். திருமலை நாயக்கரின் முயற்சியை இதிலும் முறியடித்த கெட்டி முதலி என்று நாயக்கரிடம் பெயர் எடுத்தான் [26]

ஒருமாமன்னருடன் கெட்டிமுதலி கொண்டிருந்ததாகச் சொல்லப்படும் இத்தகைய தொடர்பு நம்பும்படியாக இல்லை. கெட்டிமுதலியை தளவாய் இராமப்பையனால் வெல்ல முடிய வில்லை என்பது, அரசனின் அரண்மனைக்குள் பாளையக்காரன் ஒருவன் யானை மேல் அமர்ந்து வருதல், சுரை இலையில் உண்ண அது கீரையாதல் முதலியன முழுவதுமாக நம்பும்படி யாக இல்லை. பெரியவர்கள் சொல்லக் கேள்வியினாலே எழுதப் பட்ட கைப்பது [27] என வம்சாவளி கூறுவதால் இந்த நிகழ்ச்சி களைச் செவிவழிச் செய்திகள் என்று கொள்ளலாம்.

## புதுப்பாளையம் :

திருமலை நாயக்கர் காலத்தில் புதிதாகப் பாளையம் ஒன்று தோன்றியதாகவும் வம்சாவளி நூல் விவரிக்கிறது.[28] சுக்காம்பட்டி பாளையக்காரன் பாலமுத்தையா நாயக்கன். இப்பாளையத்தின் சிறுநாயக்கராக அவனுடைய தம்பி கோணக் கழுத்துவல்லக் கொண்டம நாயக்கன் இருந்தான். சுக்காம்பட்டி பாளையக் காரனைச் சேர்ந்த பெண்கள் சிறுநாயக்கரைக் கொன்றுவிட

வேண்டும் என்னும் எண்ணத்தில் அவர் உண்ணும் உணவில் ஒருநாள் மருந்தைக் கலந்துவிட்டனர். சிறுநாயக்கர் எப்போதும் தாம் உண்ணும் முன்பு சிறிது நாய்க்குக் கொடுத்துவிட்டு அப்புறம் சாப்பிடும் பழக்கம் உடையவர். வழக்கம்போல அன்றைய முதல் உணவை உண்ட நாய் இறக்கவே — மனம் வெறுத்து குதிரை ஏறி எரியோடு (திண்டுக்கல் கரூர் சாலையில் உள்ள ஊர்) கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். இக் கிராமத்தின் நாட்டாண்மை காப்பிலியனாகிய காளகவுண்டன், சிறுநாயக்க ராகிய வல்லக்கொண்டம நாயக்கருக்கு ஆறுதல்கூறி — தன்னுடைய சொந்த செலவில் மண்கோட்டையும் அரண்மனையும் கட்டிக்கொடுத்தார். சிறிதுநாளில் வல்லக் கொண்டம நாயக்கர் படை கொண்டு சென்று பக்கத்திலுள்ள பெரும்பள்ளிக் கோட்டையையும் பிடித்துத் தனது எல்லையை அதிகப்படுத்தினார். நல்லமனாகோட்டை, பாடியூர், கொளத்தூர், மகரம்பாடி, மல்லுவார் பட்டி, ஆலகுவாரபட்டி, சீறாமனேத்தம், சித்தூர் முதலீய 10 கிராமங்களையும் இவற்றுடன் சேர்த்து எரியோடு பாளையம் தனியாக அமைக்கப்பட்டது. பிரமாதி (கிபி 1639) மாசிமாதம் நாட்டாண்மை காள கவுண்டன், அம்மைய நாயக்கர், கன்னிவாடி பாளையக்காரன் முதலியோர் எரியோடு பாளையத்தைத் தனியாக உருவாக்கி அதன் பாளையக்காரனாக வல்லக் கொண்டம நாயக்கருக்கும் பட்டம் கட்டி வைத்தனர் என்று வம்சாவளி கூறுகிறது. எரியோடு வல்லக் கொண்டம நாயக்கன் மதுரை திருமலை நாயக்கரின் உத்தரவுப்படி நடந்து வகைதீர்ப்பு கலிப்பணம் 4000 மதுரை அரசுக்குச் செலுத்தி ஆண்டு வந்தார்.

திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் விசுவநாதன் ஏற்படுத்தாத புதுப்புது பாளையங்களும் தோன்றின. அவற்றை மதுரை நாயக்கர் அரசும் அங்கீகாரம் அளித்துள்ளது. அண்ணன் தம்பி பூசல்கள் தனித்தனிப் பாளையங்கள் உருவாவதற்குக் காரணமாக இருந்துள்ளன, என்பதையும், புதிய பாளையக்காரனுக்கு அருகில் உள்ள பாளையக்காரர்களே பட்டம் சூட்டி வைக்குள்ளனர் என்பதையும் இவ்வரலாற்றிலிருந்து அறிந்து கொள்கிறோம். இத்தகைய புதிய பாளையங்கள் மதுரையில் உள்ள நடுவன் அரசின் அனுமதியுடன் தோற்றம் பெற்றனவா என்பது ஆய்வுக்குறிய ஒன்று.

## விருபாட்சி வம்சாவளி தரும் செய்திகள் :

விருபாட்சி பாளையக்காரன் திருமலை கும்பள சின்னப்ப நாயக்கன் திருமலை நாயக்கரிடம் முதல் மைசூர்ப் போரிலும்,

சேதுபதி போரிலும் பங்கு கொண்டு, சேதுபதி போர் முடிந்த சில ஆண்டுகளில் இறந்தவர். இந்த விருபாட்சி பாளையக் காரன் சகவருஷம் 1524 சுபகிருது முதல் விசு வருஷம் வரை 40 ஆண்டுகள் பாளையத்தை ஆட்சி செய்தான் என்று வம்சாவளி கூறுகிறது.[29] (கி. பி. 1602 முதல் கி. பி. 1642 வரை. தமிழ் ஆண்டும் சரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது) இந்த விருபாட்சி பாளையத்தில் வம்சாவளிப் பகுதி திருமலை நாயக்கர் காலத்தில் நடைபெற்ற சில செய்திகளைத் தொகுத்துத் தருகிறது.

## முதல் மைசூர் போர் :

திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் கி. பி. 1625ல் மைசூர் சாமராஜ உடையார். அரசுரநந்திராசா தலைமையில் மைசூர்ப் படையை மதுரை நோக்கி அனுப்பி வைத்தார். தளவாய் இராமப்பையன் கன்னிவாடி பாளையக்காரன் ரங்கண்ணநாயக்கன் உதவியுடன் திண்டுக்கல் வரை வந்து விட்ட மைசூர்ப்படையை முறியடித்தான் என்பது வரலாறு.[30] இவ்வரலாற்றுச் செய்தியை விருபாட்சி வம்சாவளியும் உறுதிப் படுத்துகிறது. மைசூர்சமஸ்தானத்திலிருந்து தேவராசா உடையார், கறாசூர் நந்திராசா படை, பாளையத்துடனே கணவாயிக்குக் கீழே திண்டுக்கல் வரைக்கும் வந்தது. தளவாய் இராமப்பையன் அனேக தளத்துடனே திண்டுக்கல்லுக்கு வந்து, விருபாட்சி திருமலைகும்பள சின்னப்ப நாயக்கன் உட்பட பாளையக்காரர் அனைவரையும் அழைத்துக் கொண்டு, மைசூர் வரைக்கும் நந்திராசாவை விரட்டிச் சென்று மைசூரையும் கைவசப்படுத்தினான் என்பது வம்சாவளியின் தொடர்.[31]

## மூக்கறுப்புப் போரும் திருமலைநாயக்கர் இறப்பும் :

திருமலை நாயக்கர் விளம்பி வருஷம் மாசி 4ல் இறந்தார் என்று மதுரைத் தலவரலாறு கூறுகிறது.[32] இதனை ஏற்றுக் கொண்ட சத்தியநாத ஐயர் அவர்கள் திருமலை நாயக்கர் 16—2—1659ல் இறந்தார் எனக் கி. பி. ஆண்டில் கொடுத் துள்ளார்.[33] திருமலை நாயக்கர் இறப்புப் பற்றிப்பல கதைகள் சொல்லப்படுகின்றன ஆனால் பாளையப்பட்டுக்களின் வரலாறு (விருபாட்சி வமசாவளி) மைசூர் மூக்கறுப்புப் போர் நடைபெற்று வெற்றி கிட்டும் சமயத்தில் நோயால் இறந்தார் எனக் கூறுகிறது.

மைசூர் கண்டீரவ நரசராஜாவின் தளவாய் கம்பையா தலைமையில் வந்த மைசூர்ப் படை சத்தியமங்கலம் வரைவந்து மூக்கறுப்புப் போரை நடத்திக் கொண்டிருந்தது. திருமலை சேதுபதி இப்போரை முறியடித்தார் என்பர்.[34] இப்போரைப் பற்றியும் திருமலை நாயக்கர் இறப்பு பற்றியும் வம்சாவளி விரிவாகக் கூறுகிறது.

விருபாட்சி திருமலை கும்பள. சின்னப்பநாயக்கன் இறந்து அவன் மகன் திருமலை தாசரி சின்னப்ப நாயக்கன் பாளையக் காரனாக இருக்கும் போது மைசூர்ப்படை மீண்டும் திண்டுக்கல் வரை வந்தது. திருமலை நாயக்கன் தம்பி முத்துராசா நாயக்கன் திண்டுக்கல் வந்து பாளையங்களைச் சேகரித்து மைசூர் வரை சென்று மைசூர்ப்படையை முறியடித்துத் திரும்பும் வேளையில் மதுரையில் திருமலைநாயக்கர் தெய்வீகமானார் என்பது வம்சாவளி தரும் செய்தி.[35] திருமலை நாயக்கரின் தம்பி முத்துராசா நாயக்கன் என்பவன் (குமாரமுத்து நாயக்கன் என்றும் அழைக்கப் பெற்றுள்ளான்)[36] மைசூர் மூக்கறுப்புப் போரை முறியடித்தான் என்னும் புதிய செய்தியை வம்சாவளி நமக்கு வழங்கியுள்ளது. எனவே திருமலைநாயக்கர் மைசூர் வெற்றிச் செய்தியை அறிவதற்கு முன்னரே இறந்தார் என அறியலாம்.

## விருபாட்சி நாயக்கன் தூது :

விருபாட்சி பாளையக்காரன் திருமலை தாசரி சின்னப்ப நாயக்கன் சமாதானப் பணி ஒன்றை மேற்கொண்டமையையும் வம்சாவளி அறியத் 'தருகிறது. மைசூர்ப்போர் முடிந்து திருமலை நாயக்கர் தம்பி, முத்துராசா நாயக்கன் மதுரை திரும்புவதற்குள் மதுரையிலிருந்த துஷ்டசாமாஜிகள் முத்துவீரப்ப நாயக்கருக்கு (முத்துவீரப்ப நாயக்கர் II திருமலை நாயக்கரின் மகன் என்பர்) மதுரை நாயக்கர் எனப் பட்டம் கட்டி வைத்தனர். மதுரை திரும்பிய முத்துராசா நாயக்கன் " நான் இருக்க அவனுக்கு எவ்வாறு பட்டம் கட்டி வைக்கலாம், எனவே படையுடன் சென்று முத்துவீரப்ப நாயக்கனைக் கைது செய்வேன் " எனச் சில மொழிபகர்ந்தான்.

மதுரையின் புறத்தே பாளையம் இறக்கியிருந்த முத்துராசா நாயக்கனின் சினம் தணித்து, மதுரைக்குள் சென்று முத்துவீரப்ப நாயக்கரைக் கண்டு சமாதானம் பேசி, சிலுக்காச்சி சீமைக்கு (சிவகாசிச்சீமை) முத்துராசா நாயக்கனைத் தலைவனாக்கி

மதுரை அரசில் ஏற்பட இருந்த ஒரு போராட்டத்தைத் தவிர்த்து பெருமை விருப்பாட்சி பாளையக்காரன் திருமலை தாசரி சின்னப்ப நாயக்கனையே சேரும்.[37]

திருமலை நாயக்கரின் போர்செலவு முதலியவற்றிற்காகப் பணம் கொடுத்தும் போர்களுக்குப் படைகள் கொடுத்தும், தாமும் உடன் சென்று, போரில் வீரம் காட்டி இறக்க நேர்ந்தால் இறந்தும், மதுரை அரசுக்கு ஏற்பட இருந்த நெருக்கடிகளைத் தவிர்த்தும்-திருமலை நாயக்கரின் தோளோடு தோள் நின்று பணியாற்றிய பாளையக்காரர் ஒவ்வொருவரின் பெயரும், வரலாறும் வரலாற்றில் இடம் பெற வேண்டும் என்பதில் ஐயமில்லை.

## அடிக்குறிப்புகள் :

1. தமிழக வரலாறு — கு. ராஜய்யன் 1980. ப. 38

2. பாளையப்பட்டுக்களின் வரலாறு என்னும் கையெழுத்துப் பிரதிகள் கி பி. 19 - ஆம் நூற்றாண்டின் கி பி 1816 வாக்கில்) தொடக்கத்தில் மெக்கஞ்சி என்பவரால் ஒவ்வொரு பாளையத்தின் வரலாறு முதலியவற்றை அறிந்து கொள்வதற்காக தொகுக்கப் பெற்றவை. ஒவ்வொரு பாளையங்களும் தத்தமது பாளையங்களின் தோற்றம் முதலியன பற்றிய வரலாற்றினை அப்போதைய ஆங்கிலேய அரசுக்குச் சமர்ப்பித்த கைப்பிரதிகள், பாளையங்களில் இருந்த ஓலைச் சாசனங்கள், செப்புச் சாசனங்கள், செவி வழிச் செய்திகள் முதலியவற்றிலிருந்து எழுதப் பெற்றவை. இக்கைப் பிரதிகள் என்று கைப்பிரதிகளே கூறுகின்றன. எனவே பாளயப் பட்டுக்களின் வரலாறு என்னும் இக் கைப்பிரதிசள் முழுவதுமாக செவி வழிச் செய்திகளைக் கொண்டு தொகுக்கப் பெற்றவை எனக் கூறி இவை வரலாற்றுக்கு உதவாது எனத் தள்ளிவிடல் இயலாது. மதுரை நாயக்க அரசின் பல வரலாற்றுப் பகுதிகளை மொழி தெரியாத வெளி நாட்டு ஏசு தொண்டர்கள் கடிதங்களிலிருந்தும் எடுத்துக் கொண்டுள்ளோம், என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் திருமலை நாயக்கர் காலத்தில் அம்மையநாயக்கனூர் போகிகள் செப்பேடு பெற்றனர் என்னும் பாளையப்பட்டு வரலாறு கைப்பிரதி கூறும் செய்தியைக் கொண்டு விசாரித்ததில் அண்மையில் மேற்படி செப்பேடும் இக் கட்டுரை ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

3 மதுரை நாயக்கர் வரலாறு அ.கி பரந்தாமனார் 1971 ப 166

4 Ramnad Manual

5 History of the Nayaks of Madura R. Sathyanatha Ayyar 1980 p. 90
6 பாளையப்பட்டுக்களின் வரலாறு – தொகுதி 1 – 1931 பக்கம் 28—29.
7 ஷை தொகுதி 2, 1931 பக்கம் 166.
8 இராமய்யன் அம்மானை – சரசுவதி மகால் வெளியீடு—1978 பக்கம் 58—61.
9 பாளையப்பட்டுக்களின் வரலாறு தொகுதி 2 பக்கம் 101—102.
10 ப. வ. தொகுதி பக்கம் 52–53.
11 ப. வ. தொகுதி 2 பக்கம் 166
12 பா. வ தொகுதி 2 பக்கம் 102.
13 பா. வ தொகுதி 2 பக்கம் 37–38.
14 இராமய்யன் அம்மானை பக்கம் 80
15 Ramnad Manual, History of Nayaks of Madura பக்கம் 92.
16 பா. வ. தொகுதி 2. பக்கம் 101—102.
17 பா. வ. தொகுதி 2. பக்கம் 166–167
18 பா. வ. தொகுதி 1. பக்கம் 127.
19 பாளையப்பட்டுக்களின் வரலாறு தொகுதி 2 பக்கம் 52—53
20 பாளையப்பட்டுக்களின் வரலாறு தொகுதி 2. பக்கம் 37—38
21 இராமப்பையன் அம்மானை கூறும் சேதுபதி மருமகன் வன்னியத் தேவனைப் பற்றி பாளையப்பட்டுக்களின் வம்சாவளியும் கூறுகிறது. சேதுபதி மருமகன் வன்னியத் தேவனுக்கு அம்மை கண்டிருந்தது எனவும், வன்னியன் அதனைக் கூடப் பொருட்படுத்தாமல் குதிரை மீது ஏறிப் போர்க்கு வந்தான் எனவும், வன்னி பெரும் ஆற்றலுடன் பொருதியும் இறந்தான் எனவும் வம்சாவளி கூறுகிறது. (பா. வ தொகுதி 2. பக்கம் 101).
22 பா வ. தொகுதி 2. பக்கம் 102
23 இராமய்யன் அம்மானை பக்கம் 7, 31.
24 இராமய்யன் அம்மானை பக்கம் 54, 68, 75.
25 பா. வ. தொகுதி, 1, பக்கம், 2, 9.
26 பா. வ. தொகுதி, 1, பக்கம், 10.
27 பா. வ. தொகுதி, 1, பக்கம், 1.
28 பா. வ. தொகுதி, 1, பக்கம், 77, 78.
29 பா. வ. தொகுதி, 2, பக்கம், 167.
30 History of the Nayaks of Madura P 88 — 89.
31 பா. வ. தொகுதி, 2, பக்கம், 165.

(தொடர்ச்சி 72ம் பக்கம் பார்க்க)

# திரு நாராயண குருவின் தேவாரம்

டாக்டர் நா. ஆறுமுகம்,
தமிழியல் துறை,
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி.

15—3—90இல் புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறை நிகழ்த்திய அறிவரங்கத்தில் படிக்கப்பெற்றது.

இந்தியப் பெருநாட்டில் கடந்த நூறு ஆண்டுகளில் தோன்றிய ஐந்து அல்லது பத்துத் திருப்பிறப்புகளில் (அவதாரங் களில்) ஒருவரான நாராயண குரு கருதப்படுகிறார். (Sree Narayana Guru considered as one of the five or ten avatars that have appeared in India during the last hundred years—Acharya Vinoba Bhave).

'நாராயண குரு செயலாற்றல் மிக்க ஞானி. மக்களையும் மக்களுடைய தேவைகளையும் நுட்பமாயுணர்ந்த சிறந்த சமய அறிஞர். அவருடைய அறிவுரைகளில் ஆதி சங்கரரின் தத்துவம் ஊடுருவிப் பரவியுள்ளது. தென் இந்தியாவைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காகப் பெரு மளவில் நாராயண குரு துணை நிற்பார்' என்று கூறுகிறார் அறிஞர் ரோமன் ரோலண்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1854இல்) எல்லா வகையான கொடுமைகளும் கேடுகளும் நிறைந்த நாகரிக முதிர்ச்சியற்ற திருந்தாத சமுதாயத்தில் (ஈழவர் குலத்தில்) தோன்றியவர், தொண்டாற்றியவர். அவர்தாம் சீர்திருத்தத்தின் புதிய மறுமலர்ச்சி எண்ணத்தையே கொண்டு வந்தவர். சமயப் பெருநூல்கள் எல்லாம் கூறுவதைப் போலல்லாமல் நாராயண குருவினுடைய போதனைகள்

---

(71 ம் பக்கத் தொடர்ச்சி)

32 மதுரைத் தலவரலாறு—செந்தமிழ் பிரசுரம், 27.
33 History of the Nayaks of Madura P 111.
34 பக்கம், 101.
35 பா. வ. தொகுதி, 2. பக்கம், 167
36 மதுரை நாயக்கர் வரலாறு அ.கி.ப. பக்கம், 257-முத்தியாலு நாயக்கர் என்றும் ஒரு பெயர் உண்டு.
37 பா. வ தொகுதி, 2, பக்கம், 167—168.

எளிமையாயிருந்தன ' என்று புகழ்கிறார் கேரள மாநிலத்தில் முன்னாள் முதலமைச்சர் திரு நம்பூதிரிபாத்.

நாராயண குருவிற்குப் பின் 27 ஆண்டுகள் கழித்துத் தோன்றி, அவருடைய மறைவுக்கு ஏழு ஆண்டுகள் முன்பே மறைந்த பாரதியார் நாராயண குருவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

" ஆலவாயில் ஸ்ரீ நாராயண ஸ்வாமி ஒரு சமஸ்கிருதப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தியிருக்கிறார்... அந்தப் பள்ளிக்கூடத்தில் எல்லா ஜாதிப் பிள்ளைகளுக்கும் சமஸ்கிருதம் கற்பிக்கப் படுகின்றது. இங்ஙனம் பல வகைகளிலே தீயர் (ஈழவர்) மேன்மை பெற முயல்வதில் நம்பூதிரிகளுக்குச் சம்மதமில்லை."

' மக்கள் நாராயண குருவினிடத்தில் அளவு கடந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். அவருடைய திருவுருவப் படத்தை வைத்துப் பூசை செய்து வழிபட்டனர். தங்களுடைய துன்பங்களைத் தீர்த்தருளும் நற்கதியளிப்பவ ராகவே (இரட்சராகவே) அவரை மதித்தனர். சிற்றூர்ப் பகுதியைச் சேர்ந்த ஓர் எளிய சிறுவனாய்த் தம் வாழ்வைத் தொடங்கிய அவர், திருக்கோயில்களில் கடவுளாக வைத்து வணங்கப்படும் அளவுக்கு உயர்ந்த நிலையை அடைந்தார். இன்றும் வணங்கப்பட்டு வருகிறார். உலகத்தில் தோன்றிய தெய்வீக மாந்தர்களில் எவருக்கும் நாராயண குரு தாழ்ந்தவரல்லர் ' (சுவாமி தர்ம தீர்த்தா).

நாராயண குரு ஏறக்குறைய 58 நூல்களைப் படைத்துள்ளார். அவைகளுள் திருக்குறள் தேவாரம் தமிழ்ப்பாடல் என்னும் மூன்றுந்தான் தமிழோடு நேரடித் தொடர்புள்ளவை. தமிழ் சமஸ்கிருதப் படைப்புகள் அனைத்தையுமே மலையாள (லிபியில்) வரிவடிவத்தில் அமைத்துள்ளார் நாராயண குருவின் தேவாரப் பாடல்களைத் தமிழ் தேவாரப் பாடல்களோடு எண்ணிப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட நாராயண குரு சமஸ்கிருதத்திலும் தமிழிலும கவிதைகள் படைக்குமளவுக்கு ஆற்றல் பெற்றிருந்தார். தமிழ் மொழியின் வளத்தை உணர்ந்து கொள்ளாமல் நாராயண குருவைப் புரிந்து கொள்ளுவது மிகவும் கடினம் என்பர் அறிஞர் யதி.

தமிழ் பேசும் மக்களோடு நாராயண குரு மிகுந்த பரிவுடன் இருந்திருக்கிறார் என்பதை அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த

சில நிகழ்ச்சிகளைச் சற்று ஆய்ந்து பார்க்கின்றவர்கள் எளிதில் உணரலாம். தமிழ்நாட்டுப் பக்தர்களின் அழைப்பு நாராயண குருவுக்கு மிகவும் பிடித்திருந்தது. மலையாளிகளை விட தமிழர்களே உண்மையாக நாராயண குருவை நம்பினார்கள் என்று 'ஜீவித சரித்திரம்' என்னும் தன்னுடைய நூலில் குறிப்பிடுகின்றார் திரு. கோட்டுக் கோயிக்கல் வேலாயுதம் (பக். 130).

தமிழ் நாட்டில் குன்றக்குடி இராமேஸ்வரம் சென்னை காஞ்சிபுரம், திருப்பரங்குன்றம், திருவேங்கடம், நாகர்கோவில் முதலிய இடங்களுக்கும் பின் இலங்கைக்கும் சென்றபொழுதெல்லாம் நாராயண குருவின் பெருமைகளைத் தமிழர்கள் அறிந்து போற்றினார்கள். அவர் மூன்றாண்டு காலம் மோனத் தவம் இருந்து ஞான உயர்நிலை பெற்ற இடம் தமிழகத்திலுள்ள மருத்துவா மலைதான். அது சுசீந்திரத்திற்கும் கன்னியா குமரிக்கும் இடையில் உள்ளது. 'தமிழர்களைப் போன்று அன்பு செலுத்தும் மக்களைக் காண இயலாது' என்று ஒருமுறை நாராயண குருவே கூறியுள்ளார். திருப்பரங்குன்றத்திலும் காஞ்சிபுரத்திலும் அவர் மடங்களை - தொண்டு நிலையங்களை நிறுவியிருந்தார். நாராயண குருவின் தொண்டையும் பெருமையும் அறிந்து பாரதியார் விரிவாக எழுதியிருப்பது, அவருக்கும் தமிழ் நாட்டிற்கும் இருந்த தொடர்பைத் தெளிவாக உணர்த்தும்.

திருவனந்தபுரத்தில் வாழ்ந்த நாராயண குரு அங்கு வாழ்ந்த தமிழர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். நாராயண குருவின் சமகாலத்தில் வாழ்ந்த சட்டம்பி சுவாமிகளின் குருவான தைக்காடு அய்யாவு சுவாமிகள் என்னும் தமிழரிடமிருந்துதான் தமிழிலுள்ள சித்தாந்த வேதாந்த நூல்களையும் யோக நெறிமுறைகளையும் நாராயணகுரு, கற்றுத் தெளிந்தார். இளமையின் தொடக்கத்தில் கண்ணனை வழிபட்ட நாராயண குரு, தைக்காடு அய்யாவு சுவாமிகள் தொடர்பிற்குப்பிறகு முருக வழிபாட்டில் ஈடுபட்டார்; முருகன் மீது பல வாழ்த்துப்பாடல்களை இயற்றினார். இவருக்குச் சம காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் (1850—1930) வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் (1840—1899), இவர்களுக்கு முன்பு வாழ்ந்த இராமலிங்க வள்ளலார் (1823—1974) ஆகியோர் போற்றிய கௌமார நெறியை — முருக வழிபாட்டை - இவரும் போற்றியது இவருக்குத் தமிழ்நாட்டுச் சமயப் போக்கோடுள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டும். தமிழில் ஆழ்ந்த

புலமை பெற்றிருந்த நாராயண குரு, திருக்குறளின் முதல் மூன்று அதிகாரங்களை மலையாளத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

தமிழிலுள்ள ஒழிவிலொடுக்கம் நூலையும் மொழி பெயர்த்த தாகக் கூறுவர். ஆனால் அது இப்போது கிடைப்பதாகத் தெரியவில்லை.

ஒரே குலம் ஒரே சமயம் ஒரே கடவுள் என்னும் அவரது மூல முழக்கத்திற்குக் காரணம் திருமூலரின் திருமந்திரந்தான் என்று கருதப்படுகின்றது (டாக்டர் கி. நாச்சிமுத்து.)

அவருடைய சிவசதகத்தில் பசுபதிபாசம் என்னும் தொடர் வருவது குறிப்பிடத்தக்கது.

தாயுமானவர் (கி. பி. 17) அருணகிரி நாதர் (கி. பி. 15) பட்டினத்தார் ஆகியோரின் சொல்லும் பொருளும் இவருடைய ஆத்மோபதேச சதகம், சிவசதகம் ஆகிய பாடல்களில் விரவி வந்துள்ளன. (காஞ்சனா பாலசுப்பிரமணியன்).

இவ்வாறு நாராயண குருவினுடைய ஆளுமையும் அறிவுரைக் கருத்துகளும் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றால் தாக்கம் பெற்றுள்ளன எனலாம்.

இந்தப் பின்னணியில், தங்களைக் கட்டிப்போட்ட அடிமைத் தளையை உடைத்தெறிந்து விடுதலை பெறுவதற்காக ஒடுக்கப் பட்ட மக்களுக்குச் சமயக் குரவர் என்னும் போர்வையில் புரட்சியுணர்வை ஊட்டிய நாராயண குருவின் தேவாரப் பாடல் களைக் காண்போம்.

மூவர் தேவாரத்தைப் படித்ததன் விளைவாகவே நாராயண குரு தேவார பாடல்களைப் பாடினார் என்றும், அவருடைய தேவாரப் பாடல்கள் ஐந்து பதிகங்களாக அமைந்துள்ளன என்றும் கூறப்படுகின்றது.

தலங்கள் தோறும் சென்று இறைவனைக் கண்டு பாடிய நால்வர் போல இவரும் அருமானூர், தில்லை ஆகிய தலங்களைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

1887 ஆம் ஆண்டில் திருவனந்தபுரத்திற்கு அருகில் நெய் யாற்றின் கரையிலுள்ள அருமானூர் என்னுமிடத்தில் நயினார் (நாயனார்) கோயிலொன்றை அமைத்த பொழுது நாராயணகுரு இத்தேவாரப் பதிகங்களைப் பாடினார் என்பார் டாக்டர் டி. பாஸ்கரன் (நாராயணகுரு சுவாமிகளும் தமிழும், பக். 23) இத்தேவாரப் பாடல்களைத் தமிழில் தக்க விரிவுரைக் குறிப்பு

களுடன் பேராசிரியர் டாக்டர் மா. இளையபெருமாள் வெளியிட்டுள்ளார்கள்.

முதல் பதிகத்தின் தலைப்பு 'நயினார் பதிகம்' எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலும் நயினார் நாயகம்' என்று முடிகின்றது. இந்த அமைப்பு மற்ற நான்கு பதிகங்களிலும் காணப்படவில்லை. நாயனார் என்னும் சொல்லே நயினார் என அமைய 'நயினார் நாயகமே' என்பதன் மூலம் 'நாயனார்க்கு நாயகமே' என்னும் கருத்தை உணர்த்து கின்றார் எனலாம்.

**பதிகம் : ஒன்று**

ஞானோ தயமே ஞாதுருவே, நாமா தியிலா நற்கதியே
யானோ நீயோ ஆதிபரம் யாதாய் விடுமோ பேசயே
தேனார் தில்லைச் சீரடியார் தேடும் நாடாம் அருமானூர்க்
கோனே மானேர் விழிபாகம் கொண்டாய் நயினார் நாயகமே

அன்றோ இன்றோ யமதூதர்க் கன்றே நின்றாள் தாராயோ
குன்றே குடையே கோதனமே கோவே காவாய் குலதேவே!
அன்றே இன்றே ஆரடியேன் நாயேன் நீயே அருமானூர்
நின்றாய் நின்றாள் தாராயோ நேயா நயினார் நாயகமே.

திருநாவுக்கரசரும் சுந்தரமூர்த்தி நாயனாரும், சம்பந்தரும் கண்ட தெய்வ நெறியை நாராயண குரு அருகனூரில் கோயில் கொண்ட மூர்த்தியில் கண்டு மகிழ்கிறார், போற்றுகிறார் என்பர் (ஆ. மாதவன், பக்கம் 4).

'ஞானத் திருவுருவே' என அப்பரும், 'ஞான விளக்கொளியாய்' என சுந்தரரும், 'ஞானத் திரளாய் நின்ற பெருமாள்' எனச் சம்பந்தரும் பாடுகின்றனர்.

**பதிகம் : இரண்டு**

எல்லா உயிரும் நின்னுரு எல்லா உடலும் நீ
எல்லா உலகும் நின்களி அல்லா தவையில்லை
பொல்லா தனவெல்லாம் பொடி செய்தாண்டருள் பூவிற்
பல்லா ருயிராகும் பரதேவே சுரகோவே (3)

கோவேறு பிரானே குறியிற் றோங்கி விளங்கும்
மூவேழு லகும் மோந்து மெழும் மோன விளக்கே
பூவேறு பிரானும் நெடுமாலும் பொடி காணாது
ஆவேசர்கள் ஆனார் ஒரு பாரோர் அறிவாரோ (4)

இவ்வாறு இரண்டாம் மூன்றாம் பதிகங்களில் அமைந்துள்ள அந்தாதித் தொடை அமைப்பு, மாணிக்கவாசகரின் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் ஆகியவை நினைவூட்டுகின்றது.

மேலும், 'எல்லா உலகமும் ஆனாய் நீயே' என்று பாடிய அப்பரும், 'ஊனாய் உயிர் புகலாய் அகலிடமாய்' என்று பாடிய சுந்தரரும்,

> 'உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்
> நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே
> நின்றான்'

என்று பாடிய சம்பந்தரும் நினைவுக்கு வருகின்றனர்!

**பதிகம் : மூன்று (8)**

> செம்மேனிச் சிவபெருமான் சிரமாலை யணிந்து
> செங்கோல் செலுத்தி
> செம்மாந்திரம் வேரறுப்போல் திருமந்திர செம்மை
> செருக்கறுப்போன்
> பெம்மான் பிணக் காடனென்றும் பெரும்பித்த னென்றும்
> பெரியோர் பெயரிட்டு
> இம்மானிட வீட்டிலணங் குமுய்யும் வகை எங்ஙனந்தோ
> இயம்புவாய்.

இந்தப் பாடலில், மூவர் தேவாரப் பாடல்கள் சிவ பெருமானைப் பிணக்காடன், பித்தன் என்று குறிப்பிடும் மரபைக் காண்கிறோம்.

> "தமியேன் தவம் செய்தறியேன் சபாநாயகர் சந்நிதிக்கே
> தினமும்
> கவியேன் கழல் கண்டு கைகூப்பிக்கடைக்கண்ணீர்
> வார்த்துக் கனிந்து மிலேன்
> நவின்மாலை புனைந்துமிலேன் நால்வர் நாவலர் சூழும்
> திருவடிக்கும்
> புவிமீதெனையே வகுத்தாய் புலைநாயேன் பிழைப்ப
> தெங்ஙன் புகல்வாய்"

சைவ சமயக் குரவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியவர்களை 'நால்வர்' என வழங்கி வரும் மரபினை நாராயண குருவும் ஏற்றுக்கொண்டுள்ளது தெரிகிறது.

" சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லெனும் நான் மறையாய்
மைவைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத்தரச் செய்த நால்வர் பொற்றாள் உயிர்த்
துணையே "

என்னும் சைவ எல்லப்ப நாவலர் பாடல் நினைவுக்கு வருகின்றது.

**பதிகம் : நான்கு**

முப்பத்து முக்கோடி யற்று மும்மூர்த்திகள் பேதமற்று
கர்பிதத் தெய்வப் பிரபஞ்சமாம் கானற் கமலமற்று
முப்பொருளற்று முப்பாழற்று முத்திகள் மூன்றுமற்று
முற்படும் முக்கட் குருமணிக்கோ என் குலுதெய்வமே.

இந்தப் பாடலில், 'முப்பத்து முக்கோடித் தேவர்களும் மூவேழுலகும் போற்றுபவன் சிவபெருமான்' என்றும் மூவர் தேவாரக் கருத்து இடம் பெற்றுள்ளது.

**பதிகம் : ஐந்து**

" தேகமிது திடமல்ல திவ்வி யானந்தத் தெள்ளமுதில்
தாகமற மூழ்கிச் சாதனச் சாத்தியச் சார்வொழிந்து
போகும்படிக்கு புவனேகநாதன் கருணை பூத்த
பாகம் பகர்ந்த பசுங்கொடி யோடு இங்கணைவது
என்றோ? "

'தேகமிது திடமல்ல' என்று யாக்கையின் நிலையாமையைக் கூறும் போக்கு,

" தந்தையார் தாயார் உடன்பிறந்தார் தாரமார்
புத்திரரார் தாந்தாமாரே
வந்தவா றெங்ஙனே போமாறே தோ மாயமாம்
இதற்கேது மகிழ வேண்டாம் "

என்று அப்பரும்,

"தந்தையார் போயினார் தாயரும் போயினார் தானும் போவார்
கொந்தவேல் கொண்டொரு சுற்றத்தார் கொண்டு போவார்"

என்று சம்பந்தரும், பாடும் பாடல்களின் தாக்கமாய் அமைந்துள்ளது எனலாம்.

மூவர் தேவாரக் கருத்துக்களைப்போலவே, வருணனைக்கூறுகளும் நாராயணகுருவின் தேவாரப் பாடல்களில் செறிந்துள்ளன.

‘ குன்றே, சுடையே, கோதனமே,
நோவே, காவாய் குலதேவே ’ (குரு. 1 : 7)

என்னும் பாடலில்,

‘ குன்றே யனைவாய், எனையாட்கொண்ட போதே
கொண்டிலையோ
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு
நாயகமே ’

என்னும் சம்பந்தர் கருத்தைக் காண்கின்றோம்.

கருத்துக்களைக் கூறுவதிலும், உவமையைக் கையாள்வதிலும், வருணனையிலும் நாராயண குரு தம்முடைய தேவாரப் பாடல்களில் கோவே, சோதியே. சுடரே, தற்பரனே, தேவே, பரஞ்சுடரே, மூவா முதல்வோனே, மதிசூடும் மறையோனே, புனலே, புத்தமுதே, போன்ற தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். மலையாள வரி வடிவில் எழுதப்பட்ட போதிலும் தமிழ் மொழியில் உள்ள மூவர் தேவாரத்தின் தாக்கத்தையே அவரது சொல்லாட்சி புலப்படுத்துகிறது எனலாம்.

இறைவனுக்கும் மக்களுக்கும் உள்ள உறவை நான்கு நெறிகளில் சைவ சமயம் கூறும்.

இறையனுபவத்தை, ஆண்டாள் அடிமை உறவில் (தாசமார்க்கம்) அப்பரும், தந்தை மகன் உறவில் (சத்புத்ர மார்க்கம்) சம்பந்தரும், தோழமை உறவில் (சக மார்க்கம்) சுந்தரரும், ஞான உறவில் (சன்மார்க்கம்) மாணிக்கவாசகரும் வெளிப்படுத்தியுள்ளனர் என்பர்.

இந்த நான்கு நெறிகளில் நாராயண குரு, அப்பர் பின்பற்றிய ஆண்டாள் அடிமை உறவிலேயே தம் பாடல்களை அமைத்துள்ளார்.

“ தமியேன் தவம் செய்தறியேன் சபா நாயகர்
சந்நிதிக்கே தினமும்
கவியேன் கழல் கண்டுகை கூப்பிக் கடைக்கண்ணீர்
வார்த்துக் கனிந்துமிலேன் ” (கரு, 8 : 10)

என்பது நாராயண குருவின் தேவாரம்.

" பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கேன் என்னை நீயிகழ வேண்டாம்"

என்பது அப்பர் தேவாரம்.

ஆக, நாராயண குருவின் தேவாரம், கருத்து, வருணனை, சொல்லாட்சி, வெளியீட்டு முறை, பக்தி நலம் ஆகிய அனைத்துத் தன்மைகளிலும் மூவர் தேவாரத்தை அடியொற்றியே அமைந்துள்ளது என்பதை அறியலாம்.

**பயன்பட்ட நூல்கள் :**

1. காஞ்சனா, நாராயண குரு சுவாமிகளும் தமிழும் — ஒரு கண்ணோட்டம்
2. டாக்டர் சி. நாச்சிமுத்து (பதி), திரு நாராயண குருவும் தமிழகமும்
3. டாக்டர் நா. ஆறுமுகம், திரு நாராயண குரு
4. தி. அ. சொக்கலிங்கம், ஐந்தருவி

---

# பாரதியின் காட்சி — நூல் மதிப்புரை

டாக்டர் இரா. சண்முகவேலன்,
எம்.ஏ., பி.டி., எம்.பில்., பிஎச்.டி.
தேர்வுநிலைத் தமிழ்விரிவுரையாளர்,
அ. வீ. வா. நி. திருபுட்பம் கல்லூரி,
பூண்டி — 613503.

திருவள்ளுவரையும் திருக்குறளையும் நினையாத / பேசாத / எழுதாத சிந்தனையாளரோ, சொற்பொழிவாளரோ, எழுத்தாளரோ இரார் என்பது போல் பாரதியாரையும் பாரதியாரின் படைப்புக்களையும் நினையாத பேசாத - எழுதாத அறிஞர் இரார். பின்னவரைப் பற்றி அவருடைய நூற்றாண்டிற்கு முன்னும் பின்னும் பலர் பல தளங்களில் கூறியும் எழுதியும் இருக்கின்றனர். அவர்களுள் அறிஞர் க. நா. சு. அன்றும் இன்றும் விடாது பாரதியாரைக் குறித்துப் பேசியும் எழுதியும் வந்துள்ளார். அவர் புதுவைப் பல்கலைக் கழகத்தில் ' வருகைதரு பேராசிரியர் ' என்னும் பொறுப்பேற்றுப் பாரதியாருடைய ' காட்சி ' யைப் பற்றிச் சொற்பொழிவாற்றி அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத்தர, அப்பல்கலைக்கழகம் பாரதியின்காட்சி (பாரதியின் வசன கவிதை பற்றிய திறனாய்வு - ஆங்கில மொழி பெயர்ப்பு) என்ற பெயரில் நூலாக வெளியிட்டிருக்கிறது.

நூலினுள் பாரதியார் காலத்துக் கவிதைச் சூழல், காட்சியின் தோற்றம், அதன் திறம் முதலானவை ஆராயப்படுகின்றன. இறுதியில் பாரதியாரின் காட்சி, 'Subramania Bharathi's Scene in English' என்ற தலைப்பில் ஆங்கில மொழிபெயர்ப்பில் காட்சியளிக்கிறது. இதற்கு முன்பு Subramania Bharathi's Free Verse Experiment, The Last word ஆகிய இரண்டு கட்டுரைகள் தமிழில் சொன்னவற்றின் மொழிபெயர்ப்புக்களாக இடம் பெற்றுள்ளன.

பாரதியார் சொல், பொருள், வடிவம், வெளிப்பாடு, கற்பனை முதலானவற்றில் பற்பல சோதனைகளை நிகழ்த்தியவர். அவருடைய ' காட்சி ' இலக்கியச் சோதனைக்கொரு சான்று. இது பெரும்பான்மையான பதிப்புக்களில் பாரதியார் கவிதைகளில் அடங்கியிருப்பதால் ' காட்சி 'யை ஒரு வகைக் கவிதை என்கிறோம். க. நா. சு. இதனைப் பாரதியார் செய்து பார்த்த ஒரு கவிதைப் புரட்சி என்று மதிப்பிட்டு, வால்ட் விட்மனுடைய புல்லின் இதழ்கள், வேத கால ரிஷிகளின் கவிதைகள், பைபிள்,

தாகூரின் கீதாஞ்சலியினுடைய ஆங்கில மொழிபெயர்ப்பு' ஜப்பானியர் ஹைக்கூ கவிதை ஆகியன 'செய்யுள் அல்லாத உரைநடைக் கவிதையைச் செய்து பார்க்கப், பாரதியாரைத் தூண்டியிருக்கலாம்' என்கிற முடிவிற்கு வருகிறவர், வால்ட் விட்மனின் புல்லின் இதழ்களே (Leaves of Grass) அவரைப் பெரிதும் பாதித்துக் 'காட்சி'யை எழுதுவித்திருக்கிறது என்கிறார்; 'காட்சி'யினது பெயர்க்காரணத்தைக் கீழ்க்கண்டவாறு விண்டுரைக்கிறார் :

> ஞாயிறு, காற்று, கடல் என்று காட்சி அளிக்கிற விஷயங்கள் பற்றி எழுதினாலுங்கூட, பாரதியார் இந்தப் பகுதிக்குக் 'காட்சிகள்' என்று பெயர் வைக்கவில்லை. 'காட்சி' என்று ஒருமையில்தான் பெயர் வைத்திருக்கிறார். இதனை எத்தனை தடவை திருப்பிச் சொன்னாலும் தகும். ஏனென்றால் இதற்கு ஓர் அர்த்தம் இருப்பதாகத்தான் தோன்றுகிறது. காட்சிகள் என்று சொல்லியிருந்தால் தனித்தனிக் கவிதைகளாக நாம் அவற்றைக் கவனிக்க முடியும் 'காட்சி' என்று ஒருமையில் சொல்லுவதால் "ஒன்றாகக் காண்பதே காட்சி" என்று அர்த்தப் படுத்திக் கொண்டு இந்தப் பகுதி பூராவையும் ஒரே நீண்ட கவிதையாகக் கவனிப்பதுதான் பொருந்தும் என்று சொல்ல எனக்குத் தோன்றுகிறது. (பு. 19)

காட்சியினது வடிவத்தை வைத்து வசன கவிதை, புதுக் கவிதை உரைநடை எனப்பலவாறு கூறுப. எனினும், பெரும் பாலோர் வசன கவிதை என்றோ, புதுக்கவிதை என்றோ கூற க. நா. சு. காட்சியைக் கவிதை, வசன கவிதை நவ கவிதை என்றெல்லாம் ஏற்றுக் கொண்டாலும் மற்றையோரைக் காட்டிலும் தனிமைப் பட்டு விலகி நின்று, தமக்கே உரிய தனித்துவத்தோடு,

> ... இப்படிப் பார்க்கும் போது காட்சி என்ற செய்யுள் நடையில் அல்லாத உரைநடைக் காவியத்தின், சிறுசிறு பகுதிகளாகப் பாரதியார் கிளைகள் என்று சொல்லுவதைக் கருதமுடியும். இதில் சம்பவங்கள் இல்லை. கதா மாந்தர் வந்து பேசுக வில்லை. காலத்தினால் ஏற்படுகிற மாறுதல்கள் இல்லை. நிரந்தரமான மனித வாழ்க்கைக்கு அடிப்படையான, பல விஷயங்களைச் சொல்ல

> வருகிறார் காவிய கர்த்தர். அதுவும் எல்லாம் புது விஷயங்கள் என்று சொல்ல வரவில்லை. புது விஞ்ஞான கருத்துகள் சில இடங்களில் இடம் பெற்றாலும், மொத்தத்தில் பார்த்தால் ஆதி புராண காலத்திய சக்தியும், அதற்கு முந்திய வேதகாலத்து ரிஷிகளின் கவிதைப் பொருளையும் தன் காவியத் திற்கு விஷயமாகக் கொண்டு காவியம் செய்திருக் கிறார் (ப. 21)

என்கிறார்; பின்னர்க் 'காட்சி'யில் அடங்கியுள்ள இன்பம், புகழ், காற்று, கடல் ஆகியவற்றை விமரிசிக்கின்றார். 'இன்பம்' குறித்து அவர் கூறுவன வருமாறு :

> காட்சியின் முதல் கிளை 'இன்பம்' என்பது. இதுவே பாரதியார் உபயோகிக்கிற வகையில் மிகவும் சிறப்பான ஒரு காவியமாகக் கருதவேண்டும். ஏனென்றால் புதுவையில் தங்கியிருந்த போது, பாரதியாருக்கு இன்பம் என்பது ஓர் அருமையான பொருளாகத்தான் இருந்திருக்க வேண்டும் ... (பக். 21-22)

பிறகு 'காட்சி' என்ற காவியத்தின் நோக்கத்தை'எடுத்துரைத்துக் காட்சியில் காலத்தின் பங்கை ஆராய்கின்றார். 'காலமும் காட்சியும்' என்னும் பகுதி க. நா. சு. வின் சிந்தனையை அடையாளம் காட்டும் நூதனப் பொறி; புது மகுடம். 'முடிவாக'க் கூறுகையில் வசன கவிதையைக் குறித்துச் சில கருத்துக்களைக் குறிப்பிட்டு, "மரபுக் கவிதையில் சொன்ன கருத்துகளையே வசன கவிதையிலும் சொல்ல முற்படுகிறார். ஆனால் மரபுக் கவிதையில் இல்லாத ஒரு வேகம் வசன கவிதையில் சிலவரி களில் காணப்படுகின்றன" (ப. 49) என்று கூறிச் சான்றுகளுடன் விளக்குகிறார்.

க. நா. சு. புதுக் கவிஞர்; மயன் கவிதைகளை (1977) வழங்கி யவர். அவருடைய கவிதை மனம் பாரதியாரின் காட்சியில் நாட்டங் கொண்டது வியப்பன்று; அதனைத் திறனாய்வு செய்து மொழி பெயர்த்து அயலார்க்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்கிற வேட்கையினால் சென்னை அருங்காட்சியகத் திலுள்ள பாரதியாருடைய கையெழுத்து ஏடுகளை நிழற்படி யெடுத்து அவற்றையே மூல பண்டாரமாய் வைத்து இந்நூலை ஆக்கியுள்ளார். அதனால் பிற மதிப்புக்களில் காணப்படும் சொற்றொடர்கள் சில இதில் காணப்படா. ஆகவே, பதிப்புக்

குறிப்பு இடர்ப்பாட்டை நீக்க ஆங்காங்கு உதவுகிறது. நூலில் தமிழ் மூலம், மொழியாக்கம் ஆகிய இரண்டையும் இணைத்திருப்பது சிறப்பு ; ஒப்பாய்விற்குப் பெரிதும் பயன் உடையது.

'காட்சி' க. நா. சு. வின் ஆய்வுப் பொருளானதால் பாரதியாருடைய கவிதைக் கொள்கைகளைத் தெரிந்து கொள்வோம் :

1) கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டுமென்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை. (புனர்ஜன்மம்-1.)

2) விடாமுயற்சியும் தெய்வ பக்தியும் அறிவிலே விடுதலையும் ஏறினால், கவிதையிலே வலிமையேறும்.

3) கவியின் இஷ்ட தேவதை அல்லது இஷ்ட சித்தி, இஷ்ட தர்மம், இஷ்ட சுகம் — இதனுடைய காந்தி அவனுடைய உள்ளத்திலே வீசும். அந்த ஒளி பாட்டிலே தெரியும். உயர்ந்த கவிதையின் நெறி அது.

4) உண்மையான கவிதை அருமையான திரவியம். ('கவி')

5) எதுகை, மோனை இல்லாத கவிதைதான் உலகத்திலே பெரிய பாஷைகளில் பெரும் பகுதியாகும். ஆனால், தளையும் வந்தமும் இல்லாத கவிதை வழக்கமில்லை. வால்ட் விட்மான், 'கவிதையைப் பொருளில் காட்ட வேண்டுமேயல்லாது சொல்லடுக்கில் காட்டுவது பிரயோஜனமில்லை' யென்று கருதி ஆழ்ந்த ஓசை மாத்திரம் உடைய தாய் மற்றபடி வசனமாகவே எழுதிவிட்டார். ('நகரம்')

6) அருமையான உள்ளக் காட்சிகளை, எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை. ('புனர் ஜன்மம்1')

7. பலபல பதங்களை அடுக்கி ஏடுகளைப் பெருக்குவது சிறந்த கவிதையன்று. கேட்பவனுள்ளத்திலே கவிதை உணர்வை எழுப்பி விடுவது சிறந்த கவிதை.
('ஜப்பானியக் கவிதை')

8. பிறர் துன்பத்தைக் காணும்போது தனது துன்பம்போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும் பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம படித்துக் கவிதை செய்யப் பழகுவாராயின், முந்தியவன் உண்மையான கவிதை எழுதுவான் ; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான் ; இவனுடைய தொழிலிலே கவிதையிராது. ('ஸங்கீத விஷயம்')

ஆக, பாரதியாரின் கணக்குப்படிக் கவிதை,மரபுப்பிடிப்பும், மரபு முறிப்பும் உடையதாகிறது. இவ் விரண்டு தீர்வைகளையும் வைத்தே பாரதியார் கவிதைகளை எழுதியிருக்கிறார். 'காட்சி' ஒரு தீர்வையின் விளைவு; ஒரு முகம். ஆனால், காட்சியைக் காவியம் என்று மதிப்பிடுவது வால்ட் விட்மனின் புல்லின் இதழ் களைக் காவியம் என்று அழைத்தலைக் (டாக்டர் ஜி. ஜான் சாமுவேல் — இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள், பக். 116—17) கருத்தில் கொண்டே ஆகும். "காட்சிகள் பன்னிரண்டு பாகங்களும் வசன காவியங்கள்தான். அவைகளிடமிருக்கும் ஜீவனையும் துடிதுடிப்பையும் பார்த்தால் செய்யுளைக் காட்டிலும் வசன காவிய உருவத்தில் இலக்கிய வளர்ச்சிக்கு இடமிருப்பது போலத் தோன்றுகிறது" என்பாரின் (கு. ப. ராஜகோபாலன், பெ. கோ. சுந்தரராஜன் — கண்ணன் என் கவி, ப. 71) பொருண் மொழியைத் தழுவிக் க. நா. சு. வும் காட்சியைக் காவியம் என்று கருதுகிறார்; கருதலுக்குக் காரணங்கள் கற்பித்துள்ளார் (ப. 32).

காட்சியைப் பற்றிப் பொது-சிறப்பு-குறிப்பு எனும் நிலைகளில் வை. சச்சிதானந்தம் (**The Impact of Western thought on Bharati**—*1970*), டாக்டர் மு. கோவிந்தசாமி பாரதி கவித்திறன் 1977), பாலா (புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை —*1981*) போன்றோர் ஆராய்ந்துள்ளனர். ஆயினும், க. நா. சு. அளவிற்கு எவரும் முதலிடந் தந்து ஆராயவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

பாரதியாருடைய கவிதைகள் பலவற்றை ராஜாஜி, ஜே. எச். கசின்ஸ், அ. சீநிவாசராகவன், பொ. ந. அப்புசாமி, பி. மகாதேவன், ஆர்.பங்காருசாமி, பி. எஸ். சுந்தரம், திருமதி. ஹா. கி. பாலம், பிரேமா நந்தகுமார், ஹெப்சிபா ஜேசுதாசன், ஏ. துரைசாமிபிள்ளை, டி. என். ராமச்சந்திரன், கே. ஜி. சேசாஸ்திரி டாக்டர் க. செல்லப்பன், கே. சுவாமிநாதன் முதலியோர் மொழிபெயர்த்துள்ளனர்.

காட்சியில் உள்ள சில வரிகள் (N. Subramanian, **Robert Frost** and **Subramania Bharati** —1984, ' Cakti ' (சக்தி), P. 66. ஒருபகுதியில் ஒருகவிதை (K. Swaminathan, **Subramania Bharati** Chosen Poems and Prose- 1984, ' Sakti, PP. 203-4) ஒருபகுதிக் கவிதைகள் (A. K. Ramanujan, wind', மேற்கண்ட நூல், பக். 205—19), சிலபகுதிகளுள் சில கவிதைகள் (Prema Nandakumar, **Poems of Subramania Bharati,** — 1977, Joy, Sun, Wind, Ocean, PP. 141—156) எனும்படி மொழி

பெயர்க்கப் பெற்றுள்ளன. பி. ராஜா காட்சியை **The Sun and the Stars** – 1982) ஓரளவிற்கு முழுமையாக மொழிபெயர்த்திருக்கிறார். கே. ஜி சேசாஸ்திரியும் **Prose Poems of the Mahakavi** – 1984), டாக்டர் அ. தட்சிணாமூர்த்தியும் காட்சியை முற்றிலுமாக மொழிபெயர்த்துள்ளனர். இவர்களைக் க. நா. சு. தொடர்ந்தாலும் பாரதியாருடைய கையெழுத்துப் படியில் அடங்கியுள்ள காட்சியை (இன்பம், ஞாயிறு, சக்தி, காற்று, கடல்), மட்டுமே முழுவதுமாய்மொழி பெயர்த்திருப்பது குறிப்பிடற்குரியதாகும்.

மொழிபெயர்ப்பில் 1) சொல்லுக்குச் சொல்மொழிபெயர்த்தல் (metapharase translation and literal translation), 2) விரிவான மொழி பெயர்ப்பு (amplification), 3) முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு (close or accurate translation), 4) சுருக்கம் (Paraphrase or abridgement) 5) தழுவல் (adaptation), 6) மொழியாக்கம் (Transcreation) போன்ற வகைகளைக் குறிப்பிடுவர். க. நா. சு. வினுடைய மொழி பெயர்ப்பில் இவற்றுள் சில காணப்படுகின்றன.

**இன்பம் :**

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமையுடைத்து.

காற்றும் இனிது.

தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.

ஞாயிறு நன்று. திங்களும் நன்று.

வானத்துச் சுடர்களையெல்லாம் மிக இனியன.

மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.

கடல் இனிது. மலை இனிது. காடு நன்று.

ஆறுகள் இனியன. உலோஹமும், மரமும், செடியும், கொடியும், காயும், கனியும் இனியன.

பறவைகள் இனியன. ஊர்வனவும் நல்லன.

விலங்குகள் எல்லாம் இனியவை. (க. நா. சு. வின் மூலக் கையெழுத்துப் படியில இல்லை.)

மனிதர்கள் மிகவும் இனியர். நீர் வாழ்வனவும் நல்லன.

ஆண் நன்று. பெண் இனிது.

மேற்கண்ட பகுதியைக் க. நா சு. பின்வருமாறு மொழிபெயர்த்திருக்கிறார்.

This world is sweet. The sky is sweet. The wind is joy.
Fire is sweet. Water is sweet. The land is sweet.
The Sun is good. The Moon too is sweet.
The Stars in the sky are sweet very sweet.
The Rain is sweet. Lighting sweet. Thnnder too is sweet.
The Sea is sweet. The Mountain is sweet. The Forest is sweet.
The Rivers are sweet. Minerals, trees, the plant, the Geeper
Fruit, and unripe fruit are sweet.
Birds are sweet. Creatures that Geep are good.
Human beings are sweet.
Male is sweet, and so is Female. (ப. 97)

மூல மொழியில் உள்ள கருத்து, தெளிவு, எளிமை ஆகியவை கூடுமான வரையில் மொழிபெயர்ப்பில் இடம் பிடித்திருக்கின்றன. குறிப்பாகக் கூறின், க. நா. சு. வின் மொழிபெயர்ப்பு ஏனையோரையும் பார்க்க அகராதிகள் தேவைப்படாதது. சொல்லுக்குச் சொல் அமைந்த மொழி பெயர்ப்பு என்று சொல்லுமளவிற்கு அஃது இருப்பினும் இடையிடையே மொழி பெயர்ப்பாளரின் சேர்க்கைகளையும் காணலாம்.

"அட, போடா, வைதிக மனுஷன்! உன் முன்னேகூட லஜ்ஜையா?
என்னடி, வள்ளி, நமது ஸல்லாபத்தை ஐயர் பார்த்ததிலே
உனக்குக் கோபமா?" என்றது ('காற்று'—1)

Go to, oh Orthodok tenth Century Man!
Are we do be shy and Coy before you?
Oh Valli my wife are you Coy because this Iyer
Catches us making Love?
Are you angry my beloved, Kandon asked his wife.
(— க. நா. சு மொழிபெயர்ப்பு, ப. 117)

மேற்போந்தவற்றில் மூலத்திற்கும் மொழிபெயர்ப்பிற்கும் இடையேயுள்ள உறவில் சிறிதே மாற்றம். ஆனால், மொழிபெயர்ப்புச் சிக்கல்களுக்குக் க. நா. சு. வும் இடர்ப்படுகிறார் என்பதற்குரிய சான்றுகள் மொழிபெயர்ப்பில் பரவலாகவே கிடைக்கின்றன. ஓர் எடுத்துக்காட்டு:

இந்த பிடாரன் என்ன வாதாடுகிறான்.
" தான தந்த தான தந்தத் தா — தனத்
தான தந்தன் தான தந்தன் தா —
தந்தனத்தன தந்தனத்தன தா "

இவ்விதமாகப் பல வகைகளில் மாற்றிச் சுருள் சுருளாக வாசித்துக் கொண்டு போகின்றனர். இதற்குப் பொருளென்ன? ('சக்தி' - 6)

What is this snake charmer discussing about ?
His melodious true is varied and pleasing
He varies it to suit his listure's taste and ear
He plays the true, and it is as if thin smoke curls are rising.
And swiring into the air.
What is the significance of the ?

(மொழிபெயர்ப்பு பக்கம் 118)

"... மொழிபெயர்ப்பு நூல் மொழிபெயர்ப்பாகவேதான் இருக்க வேண்டும் என்கிறேன் நான்" (விமரிசனக்கலை — 1959, ப. 68) என்கிற க நா. சு தமது மொழிபெயர்ப்பில் தேவையற்ற சொற் சேர்க்கை, மூல மொழிச்சொற்கள் சிலவற்றை விட்டு வருதல், மூலமொழியில் இல்லாததை கூட்டல், கால வழு முபிலான குறைகளோடு கவனமின்மையால் தவறாக மொழிபெயர்த்துள்ளதையும் காண நேரிடுகிறது. காட்டாக,

பிரமன் மகள், கண்ணன் தங்கை, சிவன் மனைவி,
கண்ணன் மனைவி, சிவன் மகள், பிரமன் தங்கை
பிரமனுக்கும், கண்ணனுக்கும், சிவனுக்கும் தாய்.
சக்தி முதற் பொருள். (— 'சக்தி' — 1)

She is Bharm's daughter, She is sister to Krishnan, She is wife of Shiva.
She is Krishna's wife, Shiva's Daughter. Brahma's sister
**She is wife to Brahma, Shri Krishna and Shiva**
She is the first of all (மொழிபெயர்ப்பு, ப. 110)

க. நா. சு. வின் மொழிபெயர்ப்புக்கள் முன்னையோர் — பின்னையோர் மொழிபெயர்ப்புக்களுடன் ஒன்றுபட்டும் மாறுபட்டும் காணப்படுகின்றன.

உணர்வே, நீ வாழ்க, நீ ஒன்று நீ ஒளி
நீ ஒன்று. நீ பல
நீ நட்பு. நீ பகை
உள்ளதும் இல்லாததும் நீ
அறிவதும், அறியாததும் நீ
நன்றும், தீதும் நீ.
நீ அமுதம், நீ சுவை, நீ நன்று. நீ இன்பம் ('இன்பம்'—7)

1) Oh Feelings. May you live. You are one. You are Light.
You are one "You are many
You are Friendship. You are enmity
What is and is not is you.
Known and unknown are you.
Good and Evil are you.
You are nectar. You are taste. You are good. You are joy.
(— க. நா. சு., ப. 99)

2) Senses, may you thrive.
You are one, You are light.
You are one, You are many.
You are friendship, you are enmity
That which is and is not, is also you
You are knowledge and ignorance.
You are both good and bad.
You are nectar, you are taste.
You are good, you are joy.
(Prema Nandakumar, **Poems of Subramania Bharati** 1977, pp. 03-'4)

3) All hail to you. O consciousness !
You are light. You are one You are many. You are a friend
You are a foe. You are the being and non-being.
You know and do not know.
You are the good and the evil
You are elixir. You are the flavour.
You are good for you are joy incarmate.
(—P. Raja, **The Sun and The Stars** 1982, pp. 15-16)

4) Consciousness, may you live long !
Thou art One, thou art Light.
Thou art One; thou art many.

Thou art friendship; thou art enmity.
Thou art that which is and is not.
Thou art the Knower and the non-knower
Thou art Good ; thou art Evil.
Thou art Nectar; though art relish.
Thou art Good ; Thou art pleasure.

K. G. Seshadri, **Prose Poems of The Mahakavi**
1984, P.4)

5) Hail to thee O Consciousness !
Thou art one, Thou art light.
Thou art oue, Thou art many.
Thou art friendship, Thou art enmity.
Both the existent and the non-existent thou art !
Both that knows and that knows not thou art !
Good and evil thou art.
Nectar thou art, Taste thou art.
Good thou art, pleasure thou art.

(Dr. A. Dakshinamoorthy, 1990)

இங்கு "எந்த இலக்கிய மொழிபெயர்ப்புமே ஒரு அளவில் குறிக் கோளை எட்ட முடியாததுதான். ஓரளவுக்கு மூல நூலில் உள்ள சாராம்சம் வந்துவிட்டால் போதும் என்று விட்டு விடவேண்டியது தான்" என்ற க. நா. சு. வின் மொழிபெயர்ப்புக் கொள்கையை குறுகிய வழி, ப. 6) ஓர்தல் நலம்.

க. நா. சு , **1984** (George Orwell — **1984** 1956), விலங்குப் பண்ணை (George Orwell -- Animal Farm, 1956). நல்லவர்கள் (Charles Dickens - Nicholas Nickleby, 1964), குறுகியவழி (Andre Gide's Novel 1986);,பசி (Knut Hamson—Hunger 1987) ஆகிய நாவல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்; இதன் மூலம் கவிதையையும் மொழிபெயர்த்துள்ளார் என்கிற பெருமையையும் அடைகிறார். அவருடைய பாரதியின் காட்சி, பாரதியாருடைய காட்சியைப் போல் அந்நியமாகி, ஆனால் அநித்தியமாகமல் நீட்சி பெற்றுப் புது வீச்சுடையதாய்ப் பொலியும், பாரதியாருடைய காட்சியைக் காண விழையும். தமிழர்க்கும் பிறர்க்கும் இஃது ஓர் இலக்கிய விருந்து; திறனாய்வு இலக்கியமாகவும் மொழிபெயர்ப்பு இலக்கியமாகவும் திகழ்கிற க. நா. சு வின் பாரதியின் காட்சி, பாரதி ஆய்வுகளுள் குறிப்பிடற் குரிய ஒன்று. வசன கவிதை.

(தொடர்ச்சி 91ம் பக்கம் பார்க்க)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு

இரா. சுந்தரமூர்த்தி, எம். ஏ, எம்.ஃபில்.
முதுநிலை விரிவுரையாளர்,
த. உ. க. கலைக்கல்லூரி,
தஞ்சாவூர் - 2.

### மார்க்கண்டேயச் சருக்கம் :

மார்க்கண்டேயர் இறைவனிடத்தில்,

"... உம்மிடத்து வைத்த அன்பு என்றென்றும் மாறா திருக்கவும், முடிவில் உம்முடைய திருவடியில் வந்து பொருந்தி இன்புறவும் அருள் செய்க" [19]

என வேண்டினார். மார்க்கண்டேயருக்குச் சிவபெருமான் அருளிய செய்தியைப்

"பின்னி டாதுமார்க் கண்டப் பெருமுனி
தன்னை யாண்ட தகுமரு தூரா" [20]

என்பதால் காணலாம்.

### வரகுணன் பழியடைதல் :

வரகுணன் வேட்டையாட ஒருநாள் சென்றான். பரிமிசை யூர்ந்து வரும்போது வழியில் மயங்கிக் கிடந்த மறையவன்மீது குதிரை கால் வைத்து மிதித்தது. பார்ப்பனன் இறந்தான்.

---

(90 ம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்றிலோ, புதுக்கவிதை வரலாற்றிலோ, புதிய உரைநடை வரலாற்றிலோ பாரதியாரின் காட்சிக்கு ஓர் இடம் இருத்தல் போல் க. நா. சு.வின் பாரதியின் காட்சிக்கு இலக்கிய ஆய்வுக் கூடத்தில் ஓர் இடம் உண்டு.

### பாரதியின் காட்சி

க. நா. சுப்பிரமணியம்,
புதுவைப் பல்கலைக் கழகம்,
தமிழ் வெளியீட்டகம், தமிழியல் துறை அக் 16, 1989,
புதுச்சேரி — 605 104.
விலை ரூ. 15-00 பக்கங்கள் 130.

வரகுணன் அறியாது அரண்மனை சென்றான். அந்தணர் சிலர் இறந்தவனைக் கொணர்ந்தனர். வரகுணன் வருந்தினான். பார்ப்பனனுக்குக் கடன் முடிக்கக் கட்டளையிட்டான். பழி தீர அறங்கள் செய்தான். பிரமச்சாயை பின் தொடர்ந்தது. வரகுணன் துன்பமுற்றான். அந்தணர்கள் மன்னனிடத்தில்,"கூடலிறைவனை நாளும் 1008 முறையாகப் பத்து நாள் நோன்புடன் வலம் வந்தால் பழி நீங்கும்'' என்றனர். அரசன் நோன்பேற்று இறைவனை வணங்கினான். இறைவன், ''சோழன் உன்னோடு போர் செய்து தோற்பதனால் நீ திருவிடைமருதூர் அடைவாய்'' என்றார்.

வரகுணபாண்டியனும் சோழனும் போரிட்டனர். சோழன் நாணித்தோற்றோடினான் அவனைத் தொடர்ந்து பாண்டியன் விரைந்து சென்றான். திருவிடைமருதூர்ப் பெருமானை வணங்கக் கீழ்த்திசை வாயில் வழியாகச் சென்றான். "கீழை வாயிலில் பிரமச்சாயை இருப்பதனால் மேலை வாயில் வழியே மதுரை செல்க'' என்று இறைவர் கூறியருளினார். மேலைக் கோபுரத்தைத் தன் பெயரால் கட்டி இறைவனை வணங்கி மதுரை சென்றான். இப்புராணச் செய்தியைப்

"பள்ளக் கரும்பௌவப் பார்சொல்
வரகுண பாண்டியனைக்
கொள்ளும் பெரும்பழிப் பேய்நீக்கி
யாண்ட குணமருதா'' [21]

என்கிறார். நூலாசிரியர் மருதனின் அருளால் பேய்நிலை நீங்குகின்றது என்பதை இப்பகுதி விளக்குகின்றது.

பிரமகத்திப் பழிநீங்கிய செய்தி திருவிளையாடற் புராணத்தில் வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலத்தில் இடம் பெறுகின்றது;[22] இது பற்றிய படம் பின்னிணைப்பில் உள்ளது. ப. 3.

திருவிடை மருதூர்த் தலபுராணத்தில் வரகுணதேவர் சருக்கத்திலும் இப்புராணச் செய்தி இடம்பெற்றுள்ளது.[23]

**வரகுணனும் அவன் மனைவியும்**

''வரகுணன் தன் மனைவியின் அழகுகளைக் கண்டு வியந்து இவள் மருதநாயகருக்கே உரியவள் என உறுதி பூண்டார். ... மனைவியை இறைவரிடம் ஒப்புவித்தார். இவள் உனக்கே தக்கவள் ஏற்றுக்கொள்ளும் என விண்ணப்பித்தான். முன்நிலை

யணிந்தார். முன்போலவே கதவுகள் விரைந்து திருக்காப்பிடப் பெற்றன ... பொழுது புலர்ந்தது ... சிவபெருமான் முடியின்மேல் விண்ணக்கிரம் ஒன்றைக் கண்டனர். இறைவன் அதனையும் மறைந்தருளினார். மன்னவர் பெருமகிழ்ச்சியடைந்தார். ஏனை யோர் வியந்தனர்.[24]

இச் செய்தியை,

" மாசிறுசீர் மதிக்குலத்து வந்துதித்த
வள்ளலெனும் வரகுணன்றன்
நேசமனை வியைக்கொணர்ந்து நீயொப்புக்
கொள்ளெனவும் நிவர்த்தி யாமல்
ஆசையொடும் விழுங்கியின்ப மனுபவித்த
தென்மருதி லமர்ந்து ளானே "[25].

" பதிவர குணன்மனை யாணங்கை மாகதி
படியவொண் விரல்கொடு தாலிச் செறிந்தன "[26]

" பெண்கொண்ட வாயரெனப்
பேர்கொண்டா ரம்மானை
பெண்கொண்ட வாயரெனப்
பேர்கொண்டா ராமாகிற் "[27]

" குலமாரும் வழுதியின்
மனையாளை யுடன்கொண்ட
குருவேத வாய்ப்பாடிக் குரவையிடு "[28]

என்றெல்லாம் விதந்து கூறுகின்றார். இப்பாடலடிகள் அரிய பொருள்கள் யாவும் இறைவனுக்குரியன என அன்புடன் அளிக்கும் அடியார் மனநிலையில் மேம்பாட்டினை உணர்த்துவன. வரகுண பாண்டியர், அவருடைய மனைவி திருவுருவங்கள் அமையப்பெற்ற படம் பின்னிணைப்பில் இடம் பெற்றுள்ளது. ப. 4.

## காக்கை உருத்திர வடிவம் பெற்றது :

திருவிடைமருதூர்க் கனக தீர்த்தத்தில் காக்கையொன்று முழுகி நீராடியது. பின் மருத மரத்தில் உட்கார்ந்தவுடன் கருமைநிறமாறிப் பொன்னிறமானது. இடைமருதூர்க்கு வந்த உரோமச முனிவர் பொன்னிறம் பெற்ற காக்கையைக் கண்டார். காக்கையின் வரலாற்றை வினவினார்; காக்கை முனிவரிடம், தான் அந்தணர் குலத்தினன் என்றும் தன்னை ஓர் அரசன்

சபித்ததனால் காக்கை வடிவம் பெற்றதாயும் கூறியது. "புண்ணியத்தீர்த்தக் கரையில் செய்ய வேண்டிய கடன்களை எல்லாம் சொல்லிச் செய்வித்து, அங்கே ஓர் அரசன் பால் தானம் ஏற்றேன். அவன் என் மார்பில் பொருந்தும் சந்தனத்தைக் கண்டான். நீ இதற்கு முன்பு தானம் ஏற்றனை சொல் என்றான். நான் உண்டென உண்மையைச் சொன்னேன். விரைந்து வீடுகள்தோறும் இரை க்கவரும் காகத்தைப் போன்றவனே. முன்பு நீ காகம் ஆகுக" எனச் சபித்தான்" என்று கூறியது. பின் இறைவனருளால் உருத்திர வடிவெய்திக் கயிலையையடைந்தது.

இப்புராணச் செய்தியைச்
" சிந்தனை செய்கருங்காக்கை
 செனைமறப் பேறளித்த
எந்தை மகாலிங்கர் " 29

என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார் மேற்கண்ட புராணச் செய்தியை, " காகமான்மியச்சருக்கம் " 30 விளக்குகின்றது.

## உணங்கல் மீன் உயிர் பெற்ற சருக்கம் :

உருத்திர உலகத்து உருத்திரர்கள் செருக்குடன் சிவபெருமானும் தங்களைப் போன்றவரே என்றுரைத்தனர். மதியாத உருத்திரரைச் சிவபெருமான், "மீன்வடிவங்கொண்டு அலைக" என்று கூறினார். உருத்திரர் அஞ்சி வணங்கிக் "காத்தருள்க" என வேண்டினர். "திருவிடைமருதூரில் நும் எண்ணம் நிறைவேறும் என்று இறைவர் கூறியருளினார். சின்னாள்களுள் சென்றபின், கடலில் பரதவன் கடல்மீன்களை (உருத்திரர்களை) வலையில் பற்றியெடுத்தான். நன்றாக மீன்களைக் காயவைத்தான். அவற்றை ஓலைப் பாயிற்கொட்டி பொதியாகக் கட்டினான். அப்பொதியை மற்றொரு பரதவச் சிறுவன் பெற்றுத் தன் குழுவினருடன் சென்றான். ஒருநாள் விடியற்காலையில் தன் குழுவினர் முன்னதாகவே புறப்பட்டுச் சென்றனர். தன் மீன் பொதியை எடுத்துச்செல்லவியலாதவனாய் தனிமையில் வருந்தினான். மருதர் தோன்றி அருளினார். மீன்கள் உயிர் பெற்றனர். பின் மீன்கள் உருத்திர வடிவம் பெற்றன. உருத்திரர்கள் உருத்திர உலகம் சென்றனர். இப்புராணச் செய்தியைப்

" புலைவீசு முணங்மன்மீ
 னுயிர் பெறச்செய் மருதீசர் " 31

என்று நூலாசிரியர் இயம்புகின்றார். உணங்கன் மீனுயிர் பெற்ற சருக்கத்தில், மருதர் அருளால், உலர்ந்த மீன்கள் உருத்திர வடிவம் பெற்ற செயல் விளக்கப்படுகின்றன.[32]

## நாய்ப்பிறப்பு :

... இறைவர் அடியார் உருக்கொண்டு பட்டினத்தாரிடம் வந்து பிச்சை கேட்டார். அடிகள் மேலைக்கோபுரத்தில் பத்திரகிரி என்ற சமுசாரி உள்ளான். அவன் பால் செல்க என்றனர். இறைவரும் அவர்பால் அடிகள் சொல்லியதைத் தெரிவித்துப் பிச்சை கேட்டார். பத்திரகிரியார் இல்லோடும் நாயுமல்லவோ என்னைச் சமுசாரி ஆக்கியது, என்று கூறி ஓட்டை நாயின்மீது எறிந்தார். நாய் உடனே உயிர் நீங்கிக் காசிராசன் மகளாகி அந்தப் பத்திரகிரியாரை அடைந்தது... பத்திரகிரியாரும் அந்தப்பெண்ணும் சோதியுட் கலந்தார்கள்[33]

இப்புராணச்செய்தியை,

"நாயுதித்த பெண்ணி னவை தீர்த்துப் பேறளித்த"[34] என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார், இப்பகுதியில் நாய்ப் பிறப்பாகிய குற்றம் நீங்கிப் பெண்ணாகி இறைவனையடைந்து பேறு கூறப்படுகின்றது.

அந்த நாயின் நினைவாகத் திருவிடைமருதூர்க் குளக்கரையில்
நாயடியாள் கோயில் இன்றும் உள்ளது.[35]

## சிவபரம்பொருள் :

சிவனைப் பற்றிய புராண வரலாறுகளைக் கூறிச் சைவத்தின் மேம்பாட்டினை உணர்த்தச் சைவச் சான்றோர் நாட்டங் கொண்டனர். அத்தகையோரின் கருத்துக்கியைய இந்நூலாசிரி யரும் புராண வரலாற்றுச் செய்திகளைக் கூறியுள்ளார்.

சிவனின் திருவிளையாடலை "எம்பெருமானின் விளையாடல்[36] எனக் குறிப்பிடுகின்றார். திருவிடைமருதூர்க் கலம்பகத்தின் வழிக் காணப்படும் அருட்செயல்களையும் சிவனைப் பற்றிய புராணச் செய்திகளையும் ஈண்டுக்காணலாம்.

சிவபெருமான், திருமால், நான்முகன் தலைமாலைகளை அணிந்திருந்தனர் என்பதை,

"வேத னரிச்சிர மாலை பரித்தலை ன "[37]
"புயங்கம்
அசையப் பொதுகடித்த லவயா மருதா "[38]

என்று குறிப்பிடுகின்றார். இப்பகுதிகளில் தேவனாகிய பிரமனின் தலையும் திருமாலாகிய அரியின் சிரத்தையும் மாலையாகச் சிவபெருமான் அணிந்திருந்தார் என்பது குறிப்பிடப்படுகின்றது.

## அடிக்குறிப்புகள்

19. த. ச மீனாட்சி சுந்தரப்பிள்ளை, திருவிடைமருதூர்த் தலபுரான வரலாற்றுச் சுருக்கம், ப. 44
20. திரு. ம. கலம்., பா. 20.
21. மேற்படி, பா. 20
22. திருவிளையாடற்புராணம் (கதைச்சுருக்கம்), பக். 46-47.
23. த ச மீனாட்சி சுந்தரம்பிள்ளை, திருவிடைமருதூர்த் தலபுரான வரலாற்றுச்சுருக்கம், பக் 95-97.
24. மேற்படி, ப 102.
25. திரு. ம. கலம், பா. 48
26. மேற்படி., பா. 4.
27. மேற்படி. பா 17.
28. மேற்படி., பா. 62.
29. மேற்படி, பா. 73.
30. த. ச மீனாட்சி சுந்தரப்பிள்ளை, திருவிடைமருதூர்த்தல புராண வரலாற்றுச் சுருக்கம், பக். 31-32.
31. திரு. ம. கலம். பா, 56
32. த ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, திருவிடை மருதூர்த் தலபுராண வரலாற்றுச் சுருக்கம், பக் 123 - 125.
33. பொன். சுப்பிரமணியபிள்ளை, மருதவனம் என்னும் திருவிடைமருதூர், ப 21.
34. திரு. ம. கலம், பா 18.
35. டி. என். சிங்காரவேலு, 'பட்டினத்தடிகள்', திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமிக்கோயில் மகா கும்பாபிஷேக மலர், ப. 54
36. திரு ம.கலம், பா. 1.
37. மேற்படி., பா. 1.
38. மேற்படி., பா 5

## வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு


## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள் | ரூ. | 50 00 |
| கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர் | ரூ. | 30 00 |
| கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. | 6 00 |
| இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ் | ரூ. | 6 00 |
| கபிலர்—நாவலர் ந. மு, வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 4 00 |
| நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 3 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர் | ரூ. | 2 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. | 1 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. | 0 75 |

### பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

| | | |
|---|---|---|
| எழுத்ததிகாரம் | ரூ. | 40 00 |
| சொல்லதிகாரம் | ரூ. | 45 00 |
| கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்] | ரூ. | 7 50 |
| கலைக் கூத்தன் கவிதைகள் | ரூ. | 4 50 |

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு நூலகர்,
அவர்கள்
அரசினர் கீழ்த்திசைச்
சுவடிகள் நூலகம்,
சென்னை
600 005

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 | 50 | 3 | 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 | 00 | 60 | 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 | 00 | 600 | 00 |


வெளியிடுவோர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837 / 1, மேலராஜ வீதி,
தஞ்சாவூர் - 613 009.